உ

கடவுள் துணை.

# செந்தமிழ்.

மதுரைத்தமிழ்ச்சங்கத்தினின்று மாதந்தோறும்வெளிவரும்

## ஒரு தமிழ்ப் பத்திரிகை.

"எனைத்தானு நல்லவை கேட்க வனைத்தானு
மான்ற பெருமை தரும்"—திருவள்ளுவர்.


தொகுதி-௩௨] பவ வருஷ மாசிமீ [பகுதி-௪.

Vol. XXXII. February-March 1935 No. 4.


உள்ளுறை.


| | | |
|---|---|---|
| நியாயப்பிரவேச மணிமேகலை:— | பத்திராசிரியர் | ௮௯—௯௬ |
| பரிசோதனைத்தொடர்:— | ஸ்ரீமத். T. N. அப்பனையங்கார் | ௯௭-௧0௨ |
| புறநானூற்றுக் கடவுள் வாழ்த்தின் கருத்தமைதி:- | ,, ஜெ. நாராயணசுந்தரம் ஐயங்கார் | ௧0௩—௧௧௨ |
| கம்பராமாயண இன்கவித்திரட்டு:- | ,, ராவ்ஸாஹிப். வெ. ப. சுப்பிரமணிய முதலியார், G.B. V.C. | ௧௧௩—௧௧௮ |
| மதிப்புரை:— | | ௧௧௯—௧௨0 |
| கலைசைக்கோவை:— (குறிப்புரையுடன்) | ஸ்ரீமத். மஹாமஹோபாத்யாய — தாக்ஷிணாத்ய கலாநிதி Dr. உ. வே, சாமிநாதையர் | 113-128 |
| குருகைமான்மியம்:- | T. K. இராமாநுஜையங்கார், உதவிப்பத்திராசிரியர் | 273-280 |


பத்திராசிரியர்—திரு. நாராயணையங்கார்.


வருஷசந்தா ரூ 4.| [தனிப்பிரதி அணா—8

வெளிநாடுகளுக்கு ரூ 4—8—0

1934.

Printed by Srimathu R. SHANMUGA RAJESWARA NAGANATHA SETHUPATHY AVERGAL. and published by THIRU. NARAYANA IYENGAR at the Tamil Sangam Power Press, No. 54, New Jail Road, Madura.

# ஒரு வேண்டுகோள்.

---

மதுரைத்தமிழ்ச்சங்கத்தினின்று மாதமொருமுறை வெளிவரும் இச்செந்தமிழ்ப்பத்திரிகையில் வெளியிடுமாறு பொருளுரைகளும், மதிப்புரைவேண்டிப் புத்தகம் முதலியனவும் அனுப்புவோர் அவற்றைப் பத்திராசிரியர், செந்தமிழ், மதுரைத்தமிழ்ச்சங்கம், மதுரை என்று விலாசமிட்டும்,

செந்தமிழில் வெளியிடுமாறு அனுப்பும் விளம்பரங்களையும், பாண்டியன்புத்தகசாலைக்கு நன்கொடையாக அனுப்பும் புத்தகம் முதலியவைகளையும், செந்தமிழ் செந்தமிழ்ப்பிரசுரங்கள் தமிழ்ச்சங்கப் பிரசுரங்கள் சங்கக்கலாசாலை சங்கப்பரீக்ஷைகள் முதலியவைசம்பந்தமாக அனுப்பும் கடிதங்கள் மணியார்டர்கள் முதலியவற்றையும், இன்னும் இச்சங்கசம்பந்தமாயறியவிரும்பியெழுதும் பிறவற்றையும் மானேஜர், மதுரைத்தமிழ்ச்சங்கம், மதுரை என்று விலாசமிட்டும் அனுப்புமாறு இதன்மூலம் கேட்டுக்கொள்ளலாயிற்று.

லக்ஷ்மீநாராயணையர்,
மானேஜர்.

---

ஸ்ரீ:

செந்தமிழநுபந்தம்.

# பத்திராசிரியர் குறிப்பு.

சென்னையில் தக்க தமிழபிமானிகள் கூடி, நாளிது 1935-ஆம் ஹு மார்ச்சுமீ 6உ ஸ்ரீ மஹாமஹோபாத்தியாய தாக்ஷிணாத்யகலாநிதி டாக்டர் உ. வே. சாமிநாதையரவர்களின் எண்பதாம் ஆண்டுநிறைவுவிழாக் கொண்டாடக் கருதியிருப்பதாகத் தெரிந்து மிகுந்த சந்தோஷமடைகிறோம்.

ஐயாவர்கள் நம் தமிழ்மொழிக்கு ஓர் ஐம்பதிற்றியாண்டின் மேலும் நீண்டகாலம் புரிந்துவரும் அரும்பெரும் பணிகளுக்கு அளவில்லை.

அன்றியும், அவர்கள் நம் மதுரைத்தமிழ்ச்சங்கம் தோன்றியகாலந்தொட்டுச் சங்கத் தனித்தமிழ்ப்புலமைத் தலைமை பூண்டு சாசுவத அங்கத்தினராகவும், சங்க நிர்வாகஸபையங்கத்தினராகவும், வித்யாவிஷய ஆலோசனைஸபையங்கத்தினராகவும், தனித்தமிழ்ப்பரீக்ஷைப் பரீக்ஷகராகவும், நூற்பரிசோதகராகவும் இருந்து தமிழ்ப்பரிபாலனம் புரிந்துவருவதும் தெரிந்ததே.

இத்தகைய காரியங்கள் எத்துணையோ பல இடையீடின்றியியற்றிவரும் ஐயாவர்கள்போலும் பெரும்பாக்கியமுடையார் இக்காலத்து எவருமில்லை. இவ்வாறு உலகநன்மைபுரிந்துவரும் ஐயாவர்களது ஒப்புரவாண்மைக்குத் தமிழுலகம் என்ன கைம்மாறு செய்யவல்லது! அவர்களிடத்து ஒவ்வொரு தமிழரும் நன்றியறிதலுடையராய் அத்திருவிழாவிற் கலந்து அதனைச் சிறப்புறச்செய்வதுடன் அத்திருவிழாவிற்குத் தம்மாலியன்ற பொருளுதவிபுரிந்தும் கிருதார்த்தர் (-செய்த பொருளுடையர்) ஆவதே தக்கதாகும்.

இவ்விழாவைச் சிறப்பிப்பது தமிழைச்சிறப்பிப்பதாகவும் இதற்குப் பொருளுதவிபுரிவது தமிழுக்குப் புரிவதாகவும் உலகத்தாரால் பாராட்டப்பெறும்.

அல்லும் பகலும் அனவரதமும் அருந்தமிழ்ப்பணியாற்றிவரும் ஐயாவர்கள் அரோகதிடகாத்திராய் எல்லாநலனுமெய்தி இன்னும் பல்லாண்டுவாழ இறைவன் திருவருள்புரிக.

திரு. நாராயணையங்கார்,
பத்திராசிரியர்.

# ஸ்ரீ மஹாமஹோபாத்தியாய
# தாக்ஷிணாத்யகலாநிதி டாக்டர்
# உ. வே. சாமிநாதையரவர்களின்
# எண்பதாம் ஆண்டு நிறைவுவிழா.

தலைவர்: கனம். பி. டி. ராஜன்.

காரியதரிசிகள்: தி. சிவராமசேதுப்பிள்ளை.
பெ. நா. அப்புஸ்வாமி.
எஸ். வையாபுரிப்பிள்ளை.

போக்கிஷதார்: ராவ்பஹதூர் கே. வி. கிருஷ்ணஸ்வாமி ஐயர்.

சென்னை,
1935-ம் ஞூல
பிப்பிரவரிமீ
6வ

அன்பார்ந்த ஐயா!

மஹாமஹோபாத்தியாய தாக்ஷிணாத்யகலாநிதி டாக்டர் உ. வே. சாமிநாதையரவர்களுக்கு 1935-ஆம் ஞூல மார்ச்சுமாதம் 6-ஆம் தேதி எண்பதாவது ஆண்டு பூர்த்தியாகின்றது.

நம்முடைய தமிழ்மொழியும் தமிழ் இலக்கியமும் அபிவிருத்தியாவதற்கு அறுபது ஆண்டுகளாக ஐயாவர்கள் மதிப்பரிய தொண்டுகளைச் செய்துவந்திருப்பதை யாவரும் நன்கறிவர். தம்முடைய மெய் வருத்தங்களை ஒருசிறிதும் பொருட்படுத்தாமல், தனியாகவே இருந்து சங்ககாலத்து அரிய பெரிய நூல்களைப் பாதுகாத்து ஆராய்ந்து பிழையறப்பரிசோதித்துப்பதிப்பிக்கும் பெருஞ்செயலைச்செய்திருக்கிறார்கள்.

அவர்கள் செய்துள்ள பேருதவியினாலேயே பண்டைத்தமிழரின் நாகரிகத்தையும் பெருமையையும் நாம் இப்பொழுது அறிந்திருக்கிறோம். நமது தொன்மையைக்குறித்து நாம் நியாயமாகப் பெருமை பாராட்டிக்கொள்வதற்கு அவர்களே முக்கியகாரணமாக உள்ளார்கள். அவர்கள் தமிழுக்குச் செய்துள்ள ஒப்புயர்வற்ற தொண்டுகளைத் துரைத்தனத்தாரும் சர்வகலாசாலையாரும் நன்குமதித்து மஹாமஹோபாத்தியாயர், டாக்டர் என்னும் பட்டங்களை அவர்களுக்கு அளித்துக் கௌரவித்திருக்கிறார்கள்.

தமிழ்ப்பாஷாபிமானிகளும் கல்வியின் மேம்பாட்டைக் கருதுவோரும் தமிழ்ப்பெரியாராகிய ஐயாவர்களின் எண்பதாவது ஆண்டு நிறைவுவிழாவைக் கொண்டாடவிரும்புவார்கள் என்பது திண்ணம்.

பிறநாடுகளிலே கல்வித்துறைகள் பலவற்றில் மேம்பாடுற்ற பெரியார்களின் வாழ்க்கையில் இவ்வகையான சந்தர்ப்பங்களை மிகவும் சிறப்பாகக் கொண்டாடுகிறார்கள். அவர்களின் ஞாபகார்த்தமாகக் கட்டுரைத் தொகுதிகளை வெளியிட்டு, உருவச்சிலைகளை நிறுவி, உபகாரநிதிகளையும் அமைத்துப் பலவாறாகப் பாராட்டுகிறார்கள்.

தமிழ்மக்களுக்கு ஐயரவர்களிடமுள்ள நன்றியறிவைப் புலப்படுத்துவதற்கும், சிறந்த பாஷாவிற்பன்னராகவும் போதகாசிரியராகவும் பதிப்பாசிரியராகவும் இருந்து நெடுங்காலமாக அவர்கள் செய்துவரும் அருஞ்செயல்களைப் பாராட்டுவதற்கும் இது தக்கசமயமாகும்.

ஆதலால் மார்ச்சுமாதம் 6-ஆம் தேதி புதன்கிழமை மாலை 5-மணிக்கு, ஐயரவர்களுக்கு உபசாரப்பத்திரம் ஒன்று அளித்தும், அவர்களுடைய உருவப்படத்தைச் சென்னைச் சர்வகலாசாலைமண்டபத்தில் நிலைபெற வைத்தும், அவர்கள் செய்துவரும் நூற்பதிப்புவேலைகள் தொடர்ச்சியாக நடைபெற்றுவருவதற்குரிய ஏற்பாடுகளைச் செய்தும், பொருளுதவிசெய்வோர்கருத்துக்கு ஒத்தபடி வேறு உசிதமானவற்றைச் செய்தும் அவர்களை இச்சமயம் பாராட்ட எண்ணியிருக்கிறோம்.

இந்த விழாவிலே தாங்களும் கலந்துகொள்வீர்களென்று நம்புகிறோம். தங்கள் உடன்பாட்டையும் தங்களுடைய கருத்துக்களையும் தெரிவிப்பதோடு தங்களாலான பொருளுதவியையும் செய்யும்படி வேண்டிக்கொள்ளுகிறோம்.

**பணம் அனுப்ப விரும்புவோர்கள் மயிலாப்பூர், வடக்குமாட வீதியிலுள்ள ஸ்ரீமான் கே. வி. கிருஷ்ணஸ்வாமி ஐயரவர்களுக்கு அனுப்பலாம்.** பொருளுதவிசெய்வோரின் கூட்டமொன்று மார்ச்சு மாதம் முதல்தேதி வெள்ளிக்கிழமை மாலை $5\frac{1}{4}$-மணிக்குத் தேனாம்பேட்டை மௌப்ரேஸ் ரோட்டில், தலைவர் கனம் பி. டி. ராஜனவர்கள் வீட்டில் நடைபெறும். தாங்கள் அச்சமயம் வந்திருந்து விழாவைச் சிறப்பாகநடத்துவதற்கு வேண்டியனவற்றைச் செய்வீர்கள் என்று எதிர்பார்க்கிறோம்.

இப்படிக்கு,

பி. டி. ராஜன் (தலைவர்).

டி. சிவராமசேதுப்பிள்ளை
பெ. நா. அப்புஸ்வாமி
எஸ். வையாபுரிப்பிள்ளை
} (காரியதரிசிகள்).

கே. வி. கிருஷ்ணஸ்வாமி ஐயர் (பொக்கிஷதார்).

உ

கடவுள் துணை.

# செந்தமிழ்.

தொகுதி-௩௨] பவ௵ மாசி௴ [பகுதி-௪.

Vol. XXXII. February-March 1935. No. 4.

## நியாயப்பிரவேச மணிமேகலை.

[௯௪—ஆம் பக்கத்தொடர்ச்சி.]

### சாதன நிருபணம்.

இனி, நியாயப்பிரவேசத்தில் சாதன நிருபணம் வருமாறு:-

19 (1) ஏஷாம் வசநாநி பரப்ரத்யாயநகாலே ஸாதநம் ।

(2) தத்ர ।

(3) அநித்ய: ஶப்த இதி பக்ஷவசநம் ।

(4) க்ருதகத்வாதிதி பக்ஷதர்மவசநம் ।

(5) யத்க்ருதகம் ததநித்யம் த்ருஷ்டம் யதா கடாதிரிதி ஸபக்ஷாநுகமவசநம் ।

(6) யந்நித்யம் ததக்ருதகம் த்ருஷ்டம் யதாகாஶமிதி வ்யதிரேகவசநம் ।

(7) ஏதாந்யேவ த்ரயோऽவயவா இத்யுச்யந்தே ॥

இவற்றின்பொருள் வருமாறு:—

(1) பக்கம், ஏது, திருஷ்டாந்தம் என்னும் இவற்றிற்கு உரிய வாக்கியங்கள் பிறர்க்கு அறிவிக்குங்காலத்தில் சாதனமாகும் (கருவியாகும்);

(2) அஃதெங்ஙனம்?

(3) சத்தம் அநித்தம் என்பது பக்ஷவசனம்;

(4) செய்யப்படுதலால் என்பது பக்ஷதரும (ஏது) வசனம்;

(5) யாதொன்று செய்யப்பட்டதோ அது அநித்தமாகக்காணப்பட்டது; குடமுதலியனபோல என்பது சபக்ஷத்தொடர்ச்சி வசனம்;

(6) யாதொன்று நித்தப்பொருளோ அது செய்யப்படாததாகக் காணப்பட்டது; ஆகாசம்போல என்பது வெதிரேக வசனம்.

(7) இவைகளே மூன்றுறுப்புக்களென்று வழங்கப்படுகின்றன. என்பதாம்.

மணிமேகலையில் இவை இவ்வாறு சொல்லப்படவில்லை. டுஎ-முதல், கூஎ-வரையுள்ள அடிகளால் வேறுவகையாகச் சொல்லப்பட்டன. அவை வருமாறு:—

'பக்கம் ஏது திட்டாந்தம் உபநயம்
நிகமனம் என்ன ஐந்துள. அவற்றில்
பக்கம் இம்மலை நெருப்புடைத் தென்றல்;
புகையுடைத் தாதலால் எனல்பொருந் தேது;
வகையமை யடுக்களை போற்றிட் டாந்தம்;
உபநயம் மலையும் புகையுடைத் தென்றல்;
நிகமனம் புகையுடைத் தேநெருப் புடைத்தெனல்;
நெருப்புடைத் தல்லா தியாதொன் றதுபுகைப்
பொருத்த மின்று புனல்போ லென்றல்
மேய விபக்கத்து மீட்சி மொழியாய்
வைதன் மியதிட் டாந்த மாகும்.'

என்று ஐவகையுறுப்பு மேற்கொண்டு அவற்றின் பெயர்களும் உதாரணங்களும் சொல்லப்பட்டுள்ளன. அங்ஙனம் சொல்லியிருப்பதும்

முறைவேறுபாடாம். ௬௬-ம் அடியில் 'மேவிய பக்கத்து' என்றிருப்பது பொருட் பொருத்தமின்மையால் பொருட்பொருத்த முண்டாம்படி 'மேயவிபக்கத்து' எனத் திருத்திக்கொள்ளப்பட்டது. இது விபக்கத்துக் குரிய மீட்சிமொழியாயுள்ளது. மேய - மேவிய. விபக்கம் - துணிபொரு ளில்லாத இடம். மீட்சிமொழி - வியதிரேக வியாப்திவசனம்; அது, 'யாது யாது துணிபொருளில்லாதது அது அது ஏதுவும் இல்லாதது' என்று ஏது சாத்தியங்களை இன்மைமுகத்தால் திருப்பிக்கூறும் கூற்று. மீட்சி - சென்றது திரும்புதல். 'போற்றிட்டாந்தம்' என்றிருப்பதை, 'போலெனல் திட்டாந்தம்' என்று, எனல் என்னும் ஒருசொல் கூட்டி முடிக்க.

## பக்கப்போலி.

இனி நியாயப்பிரவேசத்தில் பக்கப்போலியிலக்கணம் வருமாறு:—

20 ஸாதயிதுமிஷ்டோऽபி ப்ரத்யக்ஷாதிவிருத்த: பக்ஷாபாஸ:।

இதன்பொருள்: துணிபொருள் தெளிதற்கு விரும்பப்பட்டதா யிருந்தாலும் காட்சிமுதலியவற்றால் மாறுபட்டிருப்பது பக்கப்போலி என்பதாம்.

[இவ்வாறு பொதுவிலக்கணம் மணிமேகலையிற் சொல்லப்படவில்லை.

மூலத்தில் ப்ரத்யக்ஷாதிவிருத்த: பக்ஷாபாஸ: என்றிருப்பது ப்ரத்யக்ஷவிருத்தாதய: பக்ஷாபாஸா: என்றிருப்பின் பொருள் தெளிவாய்விளங்கும். அல்லாக்கால் *பிரத்தியக்ஷவிருத்தமுதலிய ஐந்துமே பக்கப்போலியாம் என்று மயங்குதற்கும் இடமாம். திருத்தத் தின்படி ப்ரத்யக்ஷவிருத்தாதய: பக்ஷாபாஸா: என்றிருப்பின் (மேற் சொல்லப்படும்) பிரத்தியக்ஷவிருத்தம் முதலிய ஒன்பதும் பக்கப்போலிக ளாம் எனப் பொருள் தெளிவாய்த்தோன்றும்.

---

* பிரத்தியக்ஷவிருத்தம் முதலிய ஐந்தாவன:— (1) பிரத்தியக்ஷவிருத்தம், (2) அநுமானவிருத்தம், (3) ஆகமவிருத்தம், (4) லோகவிருத்தம், (5) ஸ்வ வசனவிருத்தம் என்பனவாம்.

மணிமேகலையில்,

'இத்திறம் நல்ல சாதனத் தொத்தன' (கசஉ)

என்னுமளவும் நல்லசாதனம் சொல்லிமுடித்துத் தீயசாதனம் கூறத் தொடங்கி,

'தீய பக்கமும் தீய வேதுவும்
தீய வெடுத்துக் காட்டு மாவன
பக்கப் போலியும் ஏதுப் போலியும்
திட்டாந்தப் போலியுமாம்.......' (கசங—கசசு)

என்று தீய சாதனவகைகளின் இலக்கணமும் பெயரும் சொல்லப்பட்டன. இது நியாயப்பிரவேச வாக்கியப்பொருளைத்தழுவி யெழுதப்பட்டதாகத்தோன்றவில்லை. இதனுள், தீயபக்கம் முதலிய மூன்றும் இலக்கணமும், பக்கப்போலி முதலிய மூன்றும் முறையே பெயருமாகக் கொள்ளத்தக்கன. தீயபக்கம் முதலிய மூன்றும் எழுவாய்நிலையெய்திநிற்பினும், அவற்றை முறையே பக்கப்போலி முதலிய பெயர்களின் பயனிலையாகக்கொள்க. இங்கு, 'தீய' என்றது குற்றமுள்ள என்றபடி. குற்றங்கள் மேலே சொல்லப்படும்.

நியாயப்பிரவேசத்தில் 𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑌕𑍍𑌷𑌾𑌦𑌿𑌵𑌿𑌰𑍁𑌦𑍍𑌧𑌃 𑌪𑌕𑍍𑌷𑌾𑌭𑌾𑌸𑌃 என்று பக்கப்போலியைமட்டும் எடுத்துக்கொண்டு இலக்கணம் சொல்லப்பட்டிருக்கிறது. மணிமேகலையில் சாதனாபாசமாகிய பக்கப்போலி ஏதுப்போலி திட்டாந்தப்போலி என்னும் மூவகைப்போலிகளுக்கும் இலக்கணம் தொகுத்துச்சொல்லப்பட்டிருக்கிறது. இதுவும் ஒருவகை வேறுபாடு.

இனி நியாயப்பிரவேசத்தில் பக்கப்போலிகளின்பெயரும் முறையும்,

21 (1) 𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑌕𑍍𑌷𑌵𑌿𑌰𑍁𑌦𑍍𑌧𑌃 — பிரத்தியக்ஷவிருத்தம்.
(2) 𑌅𑌨𑍁𑌮𑌾𑌨𑌵𑌿𑌰𑍁𑌦𑍍𑌧𑌃 — அநுமானவிருத்தம்.
(3) 𑌆𑌗𑌮𑌵𑌿𑌰𑍁𑌦𑍍𑌧𑌃 — ஆகமவிருத்தம்.

(4) லோகவிருத்த: — உலகவிருத்தம்.

(5) ஸ்வவசநவிருத்த: — ஸ்வவசனவிருத்தம்.

(6) அப்ரஸித்தவிஶேஷண: — அப்பிரசித்தவிசேடணம்.

(7) அப்ரஸித்தவிஶேஷ்ய: — அப்பிரசித்தவிசேடியம்.

(8) அப்ரஸித்தோபய: — அப்பிரசித்தோபயம்.

(9) ப்ரஸித்தஸம்பந்த: — பிரசித்தசம்பந்தம்.

என்று இவ்வாறு கூறப்பட்டுள்ளன.

மணிமேகலையில்,

> '...........................................இவற்றுள்,
> பக்கப்போலி ஒன்பது வகைப்படும்;
> பிரத்தி யக்க விருத்தம், அநு மான
> விருத்தம், சுவசன விருத்தம், உலோக
> விருத்தம், ஆகம விருத்தம், அப்பிர
> சித்த விசேடணம், அப்பிர சித்த
> விசேடியம், அப்பிர சித்த வுபயம்,
> அப்பிர சித்த சம்பந் தம்மென.' (கசகூ—கருரு)

என்று தொகை கொடுத்துப் பெயரும் முறையும் விளங்க வரையப்பட்டுள்ளன.

இங்கு 'இவற்றுள்' என்றது பக்கப்போலி முதலியவற்றுள் என்றவாறு. இதனுள், சுவசனவிருத்தம், உலோகவிருத்தம், ஆகமவிருத்தம் என்று நிரலே எண்ணப்பட்டவை, நியாயப்பிரவேசத்தில் ஆகமவிருத்தம், உலகவிருத்தம், ஸ்வவசனவிருத்தம் என்று மாறியெண்ணப்பட்டன. இது விபரீதம். இதனால் அவ்வசனவிருத்தங்களின் சிறப்புடைமை சீர்தூக்குதலில் இருவேறுநூலாசிரியர்க்கும் கொள்கை வேறுபாடுண்டென்று தோன்றுகிறது.

இஃதன்றியும், மணிமேகலையுள் இறுதிப்பக்கப்போலிப்பெயர் அப்பிரசித்தசம்பந்தம் என்று சொல்லப்பட்டிருப்பது, நியாயப்பிரவேசத்தில் பிரசித்தசம்பந்தம் என்று சொல்லாலும் பொருளாலும் மாறுபட்டிருக்கிறது. அதன் உதாரணம் முதலியனவும் முழுதும் வேறுபட்டுள்ளன. அவை பின்பு அவ்விறுதிப்பக்கப்போலியிலக்கண ஆராய்ச்சியில் விளங்க வரையப்படும்.

இனி, நியாயப்பிரவேசத்தில் (1) பிரத்தியக்ஷவிருத்தம் வருமாறு:-

22 தத்ர ப்ரத்யக்ஷவிருத்தோ யதா ।
அஶ்ராவண꞉ ஶப்த இதி ॥

இதன்பொருள்: பிரத்தியக்ஷவிருத்தமாவது: 'சத்தம் செவிப்புலனன்று' என்று கூறுவது என்பதாம்.

இதில், பெயரும் உதாரணமுமே காட்டப்பட்டன. பிரத்தியக்ஷவிருத்தம் என்பது பெயர், 'சத்தம் செவிப்புலனன்று' என்று கூறுவது உதாரணம்.

மணிமேகலையில் இது வருமாறு:—

'எண்ணிய விவற்றுட் பிரத்தியக்க விருத்தம்
"கண்ணிய காட்சி மாறுகொள லாகும்"
சத்தம் செவிக்குப் புலனன் றென்றல்.' (கடுச—கடுசு)

இதன்பொருள்: வெளிப்படை. இதனுள் 'கண்ணிய காட்சி மாறுகொளலாகும்' என்றது இலக்கணம். இவ்விலக்கணம் நியாயப்பிரவேசத்தில் இல்லை. 'சத்தம் செவிக்குப் புலனன்று' என்பது உதாரணம்.

நியாயப்பிரவேசத்தில் (2) அநுமானவிருத்தம் வருமாறு:—

23 அநுமாநவிருத்தோ யதா । நித்யோ கட இதி ॥

இதன்பொருள்: அநுமானவிருத்தமாவது 'குடம் நித்தியப் பொருளென்று கூறுவது' என்பதாம்.

இதற்கும் பெயரும் உதாரணமுமே காட்டப்பட்டன. இதனுள் அநுமானவிருத்தம் என்பது பெயர். 'குடம் நித்தியப்பொருள்' என்பது உதாரணம்.

மணிமேகலையில் இது வருமாறு:—

'மற்றனு மான விருத்த மாவது
"கருத்தள வையைமா றுகக் கூறல்."
"அநித்தியக் கடத்தை நித்திய மென்றல்."'(கஉ௪-கஉகூ)

இதன்பொருள்: வெளிப்படை. இதனுள் 'கருத்தளவையை மாறுகக்கூறல்' என்றது இலக்கணம். [இவ்விலக்கணம் நியாயப்பிரவேசத்தில் இல்லை.] 'கருத்தளவையை' என்றது கருத்தளவைக்கு என்றவாறு. இது உருபுமயக்கம். கருத்தளவை - அநுமானப்பிரமாணம். 'அநித்தியக்கடத்தை நித்தியமென்றல்' உதாரணம்.

நியாயப்பிரவேசத்தில் (3) ஆகமவிருத்தம் வருமாறு:—

24 𑌆𑌗𑌮𑌵𑌿𑌰𑍁𑌦𑍍𑌧𑍋 𑌯𑌥𑌾।
𑌵𑍈𑌶𑍇𑌷𑌿𑌕𑌸𑍍𑌯 𑌨𑌿𑌤𑍍𑌯𑌃 𑌶𑌬𑍍𑌦 𑌇𑌤𑌿॥

இதன்பொருள்: ஆகமவிருத்தமாவது (துணிபொருள் சாதிக்கும் வைசேடிகன்) 'சத்தம் நித்தியம்' என்று சொல்லுவது என்பதாம்.

இதற்கும் பெயரும் உதாரணமுமே காட்டப்பட்டன. இதனுள் ஆகமவிருத்தம் என்பது பெயர். '(வைசேடிகன்) சத்தம் நித்தியம்' என்று சொல்லுவது உதாரணம். அதாவது: வைசேடிகன் சத்தம் நித்தியம் என்று துணியக்கருதுவானாயின், 'சத்தம் நித்தியம்' என்னும் அவ்வாக்கியம் அவனுக்கு ஆகமவிருத்தமென்னும் பக்கப்போலியாம் என்றபடி. இங்கு ஆகமமென்றது அவனுக்குப் பிரமாணநூலாகிய தருக்கசாத்திரத்தை. அதனுள், 'சத்தம் அநித்தியம்' என்று சொல்லப்படுதலால் இது அவனுக்கு ஆகமவிருத்தமாயிற்று. வைசேடிகனுக்கு

இக்கூற்று ஆகமவிருத்தமென்றதனால், 'சத்தம் நித்தியம்' என்று சொல்லும் சாங்கியனுக்கு இது ஆகமவிருத்தமாகாதென்பது குறிப்பாயிற்று.

ஆகமவிருத்தமென்னும் இப்பக்கப்போலி இங்கு மூன்றாவதாக வைக்கப்பட்டிருக்கிறது. மணிமேகலையில் ஐந்தாவதாக வைக்கப்பட்டிருக்கிறது. இதுவும் ஒருவேறுபாடு.

மணிமேகலையில் இது வருமாறு:—

'ஆகம விருத்தந்தன் னூன்மா றறைதல்
அநித்த வாதியா யுள்ளவை சேடிகன்
அநித்தி யத்தைநித் தியமென நுவறல்.' (கக௪—கககூ)

இதன்பொருள்:'காரியப்பொருள்களெல்லாம் அநித்தமாயுள்ளவை' என்ற கோட்பாடுடைய வைசேடிகன், காரியப்பாட்டால் அநித்தியமாயுள்ள பொருளைப் பக்கமாகக்கொண்டு அதனை நித்தியமாயுள்ளதென்று கூறுவானாயின் அக்கூற்று அவனுக்கு ஆகமவிருத்தமென்னும் பக்கப்போலியாம் என்பது.

இதனுள், ஆகமவிருத்தம் என்றது பெயர். 'தன்னூன்மாறறைதல்' என்றது இலக்கணம். 'அநித்தியத்தை நித்தியமெனநுவறல்' என்றது உதாரணம். வைசேடிகன் கூற்றால், காரியப்பொருள்கள் என்பார் 'அநித்தியத்தை' என்றார். 'காரியப்பொருள்கள் நித்தியம்' என்பது வைசேடிகன்கூற்றாங்கால் ஆகமவிருத்தத்துக்கு உதாரணமாமென்றபடி.

இங்குக் கூறிய 'ஆகமவிருத்தம் தன்னூன்மாறறைதல்' என்ற இலக்கணம் நியாயப்பிரவேசத்தில் இல்லை. உதாரணமும் அதில் வேறுபட்டுள்ளது.

(தொடரும்.)

திரு. நாராயணையங்கார்,
பத்திராசிரியர்.

---

# பரிசோதனத் தொடர்.

(சொல்-இளம்பூரணம்.)

எஉ-ஆம் பக்கத்தொடர்ச்சி.

பரிசோதனம் 22. (வினையியல் 31.) "அவற்றுள், முதனிலை மூன்றும் வினைமுதல் முடிபின" என்பது சூத்திரம். இதன் பொருள், முன்னர் வினையெஞ்சுகிளவியை ஒன்பதுவகைப்படுத்துரைத்தசூத்திரத்தில், 'செய்து செய்யூச் செய்பு' என முதற்கண்நின்ற மூன்றும் தத்தம் வினைமுதல்கொண்டுமுடியும் என்பதாம். இவை மூன்றற்கும் உதாரணம் முறையே உண்டுவந்தான், உண்ணூவந்தான், உண்குபுவந்தான் என வரும்.*

இனி, இச் சூத்திரத்தின் உரை, "அம் முதற்கண் நின்ற மூன்றும், அவ்வினையாக்கி அம்முதல்கொண்டு முடியும் என்றவாறு" என அச்சுப்புத்தகத்திற் காணப்படுகின்றது. இதனுள் 'அவ் வினையாக்கி அம் முதல்' என்பதிற் பொருட்பேறின்று. ஆகையால் அது, அவ்வினையாக்கிய முதல் என்று இருத்தல்வேண்டும்.

'உழுதுவந்தான்' என்பதில் உழுதவனும் வந்தவனும் ஒருவனேயாகையால், அங்குச் செய்தென்னும் வினையெச்சம் தன்னை ஆக்கிய முதல்கொண்டே முடிந்ததென்பதிற் சிறிதும் தட்டில்லை. ஆகையால் 'வினையாக்கிய முதல்' என்ற சுத்தபாடத்தினிடையே மகரவொற்றிரட்டிய காரணத்தாற் பிழையுற்றதாக, மேலும் அதனைச் சந்திபிரித்து அச்சிட்டது மிக்க தவறுடைத்தாயிற்று.

---

*இவ்வுதாரணங்கள் முறையே உழுது வந்தான், உண்ணூவந்தான், நகுபுவந்தான் என இளம்பூரணருரையில்வேறுவேறுமுதனிலைமேலனவாய்க் காணப்படுகின்றன. அவை ஒருநெறிப்பாடுடையவல்லாமைக்கு இங்குச் சிறந்த காரணம் கூறலரிது. முன்னர் உரையாசிரியரால் உண் என்னும் ஒருமுதனிலையேபற்றிக் காட்டப்பெற்றிருந்த அவை பின்னர் அங்ஙனம் எழுத்துருமாற்றம் எய்தினவோ என ஐயுறப்படும். இவ்வுதாரணங்களைச் சேனாவரையர் இங்ஙனம் ஒருபடியாகவே காட்டியுள்ளார். 'நகுபுவந்தான்' என்பதிற் பொருட்பொலிவின்மையால், அஃது உரையாசிரியர் காட்டியதெனல் அமையாது. 'உண்குபு வந்தான்' என்பது உகாவுயிரும் முச்சுழி ணகரத்து முதற்சுழியும் அழிந்தவிடத்து, அவ்வாறு மாறுதலடைத லெளிது. பிறவும் இவ்வாறு உய்த்துணரலாம். ஆயினும் இவ்வாராய்ச்சியிற் பெரும்பயனின்றென ஒழியற்பாற்று.

பழையபிரதியிலும் இவ்விடத்து மகாவொற்று மிக்கு வழுவியுள்ளது. ஆயினும் இஃது உய்த்துணர்வுகொண்டு எளிதில் திருத்தத்தகுவதே.

பரிசோதனம் 23. (வினையியல் 33). "ஏனை யெச்சம் வினைமுதலானு, மான்வந் தியையும் வினைநிலை யானுந், தாமியன் மருங்கின் முடியுமென்ப" என்பது சூத்திரம். இது, 'செய்து செய்யூச் செய்பு' என்ற மூன்றுமொழித்து, ஒழிந்துநின்ற வினையெச்சத்திற்கு முடிபுணர்த்துதல் நுதலிற்று.

"அக் கூறப்பட்ட மூன்றுமன்றி ஒழிந்துநின்ற வினையெச்சமாயின எல்லாம் அம்மூன்றுபோலத் தத்தம் வினைமுதல்கொண்டு முடிதலும் அவ்விடத்தின் வந்து பொருந்திய பிறவினையான் முடிதலும் உடைய" என்பது இதன் உரை.

இங்கு, 'அக்கூறப்பட்ட மூன்றுமன்றி' என்றது, செய்தென்பது முதல் இடத்தென்ப தீறாக மேற்சூத்திரங்களிற் சொல்லப்பட்ட பதினைந்து வினையெச்சத்துள் முதற்கண் நின்ற மூன்றுமன்றி என்றவாறு. அவை தம் வினைமுதலானே முடியும் என மேல் யாப்புறுத்தமையின் ஈண்டு விலக்கப்பட்டன. 'ஒழிந்துநின்ற வினையெச்சமாயின எல்லாம்' என்றது, செய்தென வென்பதுமுதல் இடத்தென்பதீறாக மேற்சொல்லப்பட்ட பன்னிரண்டும் அவைபோல்வன பிறவும் என்றவாறு. 'தத்தம் வினைமுதல்கொண்டு முடிதலும்' என்றது, தத்தம் வினைமுதல் வினையான் முடிதலும் என்றவாறு. 'பிறவினையான் முடிதலும்' என்றது, பிறமுதல் வினையான் முடிதலும் என்றவாறு. எனவே, முதல் நிற்கும் மூன்றெச்சம் அல்லாதன எல்லாம் இருவகைவினையும் கொண்டு முடிதற்கு எற்கும் என்பது பெறப்பட்டது. இது நிற்க.

இச்சூத்திரவுரையில் வரலாறுகாட்டும் முற்பகுதி, "இனி அவை வினைமுதலானே முடியுமாறு: மழை பெய்தென வளம்பெற்றது; மழை பெய்யப் பயிர் எழுந்தது எனவரும்; பிறவும் அன்ன:" என அச்சுப்புத்தகத்திற் காணப்படுகிறது. பழையபிரதியினும் இஃது இவ்வாறே உள்ளது. ஆயினும், இங்குக் குற்றமுண்மை எளிதின் அறியத்தகும். ஏனெனில், 'அவை வினைமுதலானே முடியுமாறு' என்றது வினையெச்சம் தன்கருத்தாவினைகொள்ளுதலையே குறிக்குமாகையால், இங்கு அதற்கு எடுத்துக்காட்டான இலக்கியங்கள் அவ்விலக்கணத்தோடு மாறுபடுகின்றன.

'மழைபெய்தென வளம்பெற்றது' என்பதில், வளம்பெற்றது நிலம் அல்லது பிறிதொன்று என்று பொருள்படும் பொழுது, வினையெச்சம் பிறகருத்தாவினைகொண்டதாய்க் குற்றமாம். மழைபெய்தென அம் மழைதானே வளம்பெற்றது எனச் சிறிது நலிந்து பொருள்கொள்ளும் பொழுது, அவ் வினையெச்சம் தன்கருத்தாவினைகொண்டதாய்க் குற்ற மின்றாம். ஆயினும் இதன்கட் கவர்பொருளுடைமை உண்டு.

இவ்விடத்துச் சேனாவரையர் காட்டிய 'மழைபெய்தெனப் புகழ் பெற்றது' என்ற உதாரணம் மிக்க தெளிவுடைத்து. உரையாசிரிய ரிளம்பூரணரும் ஒருகால் அதனையே காட்டியிருப்ப, பின்னர் அஃது இங்ஙனம் மாறுதலுற்றதோ என ஐயமெழுகின்றது. இஃது எவ்வா றாயினும் ஆகுக.

இம் முதல் உதாரணத்திற் பெரும்பிழையின்றென ஒருவாறு புறக் கணித்தல்கூடும். ஆயினும், இதனை அடுத்த இரண்டாம் உதாரணத் திற் பெரும்பிழையுண்மை கையிலங்குநெல்லிக்கனியாய்க் காணக் கிடக்கின்றது.

'மழைபெய்யப் பயிர் எழுந்தது' என்பதில், பெய்ய என்பது வினை யெச்சம். அதற்கு வினைமுதல் மழை. எழுந்தது என்னும் வினைக்கும் இங்கு மழையே வினைமுதலாகமாட்டாது. ஏனெனில், பயிர் என்பது அதற்குரிய வேறுவினைமுதலாய் இடையே தடையாகி நிற்கின்றது. ஆகவே இவ்வெடுத்துக்காட்டு, வினையெச்சம் பிறவினைமுதல்கொண்ட தென ஏற்குமல்லது, தன் வினைமுதல்கொண்டதென எவ்வாற்றானும் ஏற்பதின்று.

இக் கூறியவற்றால், இச் சூத்திரவுரையின் வரலாற்றுப் பகுதியில், 'இனி அவை வினைமுதலானே முடியுமாறு' என எடுத்துக்கொண்ட இலக்கணத்தோடு முன்னைய உதாரணத்தை ஒருவாறு இயைக்கலாமாயி னும், இப் பின்னைய உதாரணத்தை இயைக்கலாகாதென்பது முடிந் தது. ஆகையால் இதிலுள்ள குற்றத்தை ஆராய்ந்து திருத்துதல் மிகவும் இன்றியமையாததே.

அத்திருத்தமும் சிறிது சிந்திக்குமிடத்து எளிதிற்புலப்படாத தன்று. "செய்து செய்யூ செய்பு செய்தென, செய்யியர் செய்திய செயின் செய செயற்கென" என்று ஆசிரியர் தொல்காப்பியர் வினையெச் சங்களை முன்னர் முறைதெரித்து ஓதினார்; பின்னர் அவற்றுள் முதல்

நிற்கும் மூன்றெச்சங்கட்கு 'வினைமுதல் முடிபின' என இலக்கணம் வகுத்தார்; அதன்பின்னர் அவர் எஞ்சிநிற்கும் 'செய்தென, செய்யியர்' முதலியவற்றிற்கு 'ஏனையெச்சம்' என்னும் இச்சூத்திரத்தால் முடிவு கூறப்புகுந்தார்: என்பது இங்கு மறவாமல் நினைத்தற்குரியது. நினைக்குங்கால், சூத்திரத்தில் நிறுத்தமுறைக்கேற்ப, 'மழைபெய்தென' என்னும் எச்சத்தின்பின் 'மழை பெய்யியர்' என்னும் எச்சத்திற்கே உதாரணம் எடுத்தோதல்வேண்டும் என்பது பெறப்படும். படவே, அங்கு 'மழைபெய்ய' என்னும் எச்சத்திற்கு உதாரணம்காட்டியிருப்பது முறையன்றாம். ஆகலின், 'மழை பெய்யியர் எழுந்தது' என முன்னால் இளம்பூரணரெழுதியிருந்த உதாரணமே பின்னால் 'மழைபெய்யப் பயிர் எழுந்தது' என எழுத்துருத்திரிந்து வழுப்பட்டதென்று நன்கு விளங்கிவிடும். சேனாவரையத்தில் இவ்வுதாரணம் திருத்தமாய்த்திகழ்வதும் இங்குக் குறிக்கத்தக்கது. செயவெனெச்சத்திற்குமுடிவு 'பிறவுமன்ன' என்றதனுள் அடங்கும்.

இனி, இவ்வுரையின் எஞ்சிய வரலாறுகாட்டும் பிற்பகுதியான அடுத்தபத்தியிலும் சிறிது குற்றங்குறை உள்ளன. அதில், 'ஆங்வந்தியையும் வினைநிலையான் முடிவன' என்றது வினையெச்சம் பிறகருத்தா வினைகொள்ளுதலைக் குறிக்கும். அதற்கு எடுத்துக்காட்டான இலக்கியம் அவ்விலக்கணத்தோடு பொருந்துகின்றது. ஆயினும் அங்கு எனவெனெச்சம் ஒன்றற்கே இரண்டு முடிபு காட்டியிருப்பது மிகை. 'மழைபெய்தென உலக மார்ந்தது' என்றேனும், 'மழைபெய்தென மரங்குழைத்தது' என்றேனும் ஓர் உதாரணமே அவ்விடத்திற்கு அமையும். குழைத்தது என்றது குழையையுடையதாயிற்று என்னும் பொருட்டு. குழைத்தல் எனினும் தழைத்தல் எனினும் ஒக்கும். இது நிற்க.

வரலாற்று முற்பகுதியில் என, இயர் என்னும் முதல் இரண்டெச்சங்களை முடித்துக் காட்டியதுபோல, இப் பிற்பகுதியிலும் அவ்விரண்டெச்சங்களை முடித்துக்காட்டாது முதலது ஒன்றனையே காட்டிவிடுத்தது ஒருகுறை. இயர் என்னும் எச்சம் பிறவினைமுதல் கொள்ளுதற்கும் ஓர் உதாரணம் முன்னர் உரையாசிரியர் வரைந்திருப்ப, பின்னர் அது விடுபட்டதோ என்றும் ஐயம் நிகழ்கின்றது. சேனாவரையர் குறித்தவாறு, 'மழைபெய்யியர் பலிகொடுத்தார்' என்பது அதற்கு ஏற்ற உதாரணமாகலாம். ஏனை வினையெச்சங்கட்கு முடிபு 'பிறவுமன்ன' என்றதனுள் அடங்கும்.

இக் குற்றமும் குறையும் போல்வன அறிஞரால் அத்துணைப் பொருட்படுத்தற் குரியவல்ல. ஆயினும், இளமாணவர்கள் இடருறுமை வேண்டியும், காலவாய்ப்பட்டுச் சிதைந்து திரிந்த இளம்பூரணருரை ஒருவாறு சீர்திருத்தமுறவேண்டியும் ஈண்டுக் காட்டப்பெற்றன. உரையாசிரியர் தாமே முறைகேடான இத்தவறுகளை இயற்றியிரார் என்பது திண்ணம்.

பரிசோதனம் 24. (வினையியல் 41) "முந்நிலைக் காலமுந் தோன்றுமியற்கை, யெம்முறைச் சொல்லு நிகழுங் காலத்து, மெய்ந்நிலைப் பொதுச்சொற் கிளத்தல் வேண்டும்" என்பது சூத்திரம். மூன்றுகாலமும் தோன்று மியற்கையுடைய எல்லாப்பொருளும் நிகழ்காலத்திற் பயின்றுவரும் செய்யுமென்னும் பொதுச்சொல்லாற் சொல்லவேண்டுமென்பது இதன் உரை.

இங்கு, நிகழுங்காலத்து மெய்ந்நிலையுடைய பொதுச்சொல் என்றது செய்யுமென்னுஞ் சொல்லை. அது நிகழ்காலத்ததாயினும் ஒருகாற் பொதுவாகலுடைத்து. மூந்நிலைக்காலமும் தோன்று மியற்கையுடைய பொருளென்றது மலைபது நிலைபோல் என்ஞான்றும் ஒப்பநிகழ்வனவற்றை; யாற்றினது இடையறுவொழுக்குப்போல்வனவும் ஈண்டு அடங்கும். ஆகவே மலை நிற்கும், யாறு ஒழுகும்; என இவற்றிற்கு உதாரணம் ஓதப்பட்டன. இது நிற்க.

இச்சூத்திரவுரை, "மூன்றுகாலமும் புலப்படச்சொல்லாப்பாட்டியல்பினவாகிய எவ்வகைப் பொருள்களையும் நிகழுங்காலத்துப் பயின்று மூன்றுகாலத்திற்கும் பொதுவாகிய செய்யுமென்னுஞ் சொல்லாற் சொல்லுக என்றவாறு:" என அச்சுப்புத்தகத்திற் பதிக்கப்பட்டுள்ளது.

இங்கு, 'புலப்படச்சொல்லாப்பாட்டியல்பின' என்றது பொருளொடு நன்குபொருந்தவில்லை. ஏனெனில், 'சொல்லாப்பாடு' என்பதனை வழக்கினுள் வேறு எவ்விடத்துங் காணல் அரிது. அன்றியும் 'முந்நிலைக்காலமுந் தோன்றுமியற்கை எம்முறைச்சொல்லும்' என்ற மூலத்திற்கு, 'மூன்றுகாலமும் புலப்படச் சொல்லற்பாட்டியல்பினவாகிய எவ்வகைப்பொருளும்' என்பதே ஏற்றவுரையாதல் சாலும். 'எம்முறைச்சொல்லும்' எனவும், 'கிளத்தல்வேண்டும்' எனவும் மேல் வருகின்றமைக்கேற்ப, 'தோன்று மியற்கை' என்பதற்கு, புலப்படச் சொல்லற்பாட்டியல்பெனப் பொருளுரைக்கப்பட்டது. எம்முறைச் சொல்லு

மென்பதிற் சொல் ஆகுபெயராய்ப் பொருளையுணர்த்திற்றெனக்கொள்ள வேண்டும்.

இக்கூறியவற்றால், அச்சுப்பிரதியிற் கண்ட 'சோல்லாப்பாடு' என்பது பிழை; 'சோல்லற்பாடு' என்பது அதன் திருத்தமென நன்கு விளங்கும். வல்லின றகரவொற்றை இடையினமாகவும் பகரவொற்றிரட்டியும் எழுதியிருந்த சுவடியைப் பெயர்த்தெழுதினவர், புள்ளி நீங்கிய அவ்விடையின ரகரத்தை லகரத்தருகேயிட்ட காலாகமயங்கினமையால் இப் பிழைப்பாடம் நேர்ந்தது.

பரிசோதனம் 25. (வினையியல். 44) "இதுசெயல் வேண்டு மென்னுங் கிளவி, யிருவயி னிலையும் பொருட்டா கும்மே, தன்பா லானும் பிறன்பா லானும்" என்பது சூத்திரம். இதன் கருத்து, 'சாத்தன் ஓதல்வேண்டும்' என்பதுபோன்ற வழக்குகள் தன்பாலும் பிறன்பாலும் ஆகிய இரண்டன்மேலும் நிலைபெறும்பொருள என்பதாம்.

இங்கு, தன்பாலென்பது செயலின்வினைமுதலையும் பிறன்பாலென்பது அச்செயலைவிரும்பும் வேறொருமுதலையுங் குறிக்கும். 'சாத்தன் ஓதல்வேண்டும்' என்னும் வாக்கியத்தில் 'சாத்தன்' என்பதும் எழுவாயாகலாம்; அல்லது 'அவன் தந்தை' என்பதும் வேறொரு (தோன்றா) எழுவாயாகலாம். இங்ஙனம் இருவகையாகப் பொருள்தருங்கால், முன்னது தன்பாலான் நிலையிற்று; பின்னது பிறன்பாலான் நிலையிற்றெனக் கொள்ளப்படும். இதுநிற்க.

அச்சுப்புத்தகத்தில் இச் சூத்திரவுரை, "இது செயல் என்னும் வாய்பாட்டுச்சொல் சொல்லப்படும் ஒருவன்மேல் நிற்கற்பாலது; அது பிறவயின் நோக்கியும் நிற்கும் என்றவாறு" எனக் காணப்படுவது பிழை. ஏனெனில், 'இது செயல்வேண்டும்' என்பதுபடத் தொடர்ந்த செய்யுமென் ஈற்று ஒருசார்வினைகளுக்கன்றி, 'இது செயல்' என்ற மட்டினமைந்த வாய்பாட்டுச்சொற்களுக்கு இச்சூத்திரவிதி ஏலாதாம். ஆகவே இங்கு 'இது செயல் என்னும்' என்றிருப்பது மூலத்திற்கேற்ப, 'இதுசெயல் வேண்டும் என்னும்' என்று திருத்திக்கொள்ளற்பாற்று.

[தொடரும்.]

T. N. அப்பனையங்கார்,
தலைமைத்தமிழாசிரியர்,
இராமேசுவரதேவஸ்தானம் பாடசாலை, மதுரை.

# புறநானூற்றுக் கடவுள்வாழ்த்தின் கருத்தமைதி.

'கண்ணி கார்நறுங் கொன்றை, காமர்
வண்ண மார்பிற் றாருங் கொன்றை;
ஊர்தி வால்வெள் ளேறே, சிறந்த
சீர்கெழு கொடியு மவ்வே றென்ப;
கறைமிட றணியலு மணிந்தன்று, அக்கறை
மறைநவி லந்தணர் நுவலவும் படுமே;
பெண்ணுரு வொருதிற னாகின்று, அவ்வுருத்
தன்னு ளடக்கிக் கரக்கினுங் கரக்கும்;
பிறைநுதல் வண்ண மாகின்று, அப்பிறை
பதினெண் கணனு மேத்தவும் படுமே;
எல்லா வுயிர்க்கும் ஏம மாகிய
நீரற வறியாக் கரகத்துத்
தாழ்சடைப் பொலிந்த வருந்தவத் தோற்கே.'

இது, புறநானூற்றிற்குக் கடவுள்வாழ்த்தாகச் சேர்க்கப்பட்ட பாரதம்பாடிய பெருந்தேவனாரது பாட்டு.

'எல்லாவுயிர்கட்கும் காவலாய்நின்ற நீர் அறுதலையறியாத கமண்டலத்தானும் தாழ்சடையானும் பொலிந்த அருந்தவத்தோற்கு முடிமேற்சூடுங் கண்ணி கார்காலத்து நறிய கொன்றைப்பூ, அழகிய நிறத்தையுடைய மார்பின் அடையாளமாலையும் அக் கொன்றைப்பூ; ஊர்தி தூய வெள்ளிய ஏறு, மிக்க பெருமையையுடைய கொடியும் அவ்வேறு என்ப; விடத்தின் கறுப்பு மிடற்றை அழகுசெய்தலும் செய்தது, அக்கறுப்பு மறையை நவிலும் அந்தணரால் புகழவும்படும்; பெண்வடிவு ஒருபக்கமாயது, அவ்வடிவு ஒருகால் தன்னுள்ளே யொடுக்கி மறைக்கினும் மறைக்கப்படும்; பிறை நுதலுக்கு அழகாயது, அப்பிறை பதினெண்கணங்களாலும் ஏத்தவும்படும்.' என்பது இதன் பருப்பொருள்.

இவ்வாறு சிவபரம்பொருளின் இயல்பெடுத்துரைத்தமையானே,* இச்செய்யுள், வாழ்த்து வணக்கம் வருபொருளுரைத்தல் என்னுங் கடவுள்வாழ்த்துவகை மூன்றனுள் வருபொருளுரைத்தலின்பாற்பட்டு, இத்தகையோன் தம்வயத்தரல்லாத தீனரால் தொழற்குரியனுகிய தன்வயத்தனுதல் முதலிய குணபூர்த்தியுடைய பெரியோனெனவும், அவன் தன்னையடைவார் வேண்டியவற்றை வேண்டியாங்களித்தலையே மேற்கொண்டு எல்லாம்வல்ல இறைவனுயிருத்தலின் அவனை வணங்கினுல் அறமுதலிய நான்கும் பயக்குமெனவும் கருத்தமைந்து நிற்பதாகும்.

இதுபற்றியன்றே இந்நூலுரையாசிரியரும் இச்செய்யுளுரையில் 'இப்பெரியோனை மனமொழிமெய்களால் வணங்க அறமுதல்நான்கும் பயக்குமென்பது கருத்தாகக் கொள்க.' எனக் கருத்துரை கூறியதூஉமென்க. இக்கருத்தமைதிக்கேற்ற குறிப்புக்களும் இச்செய்யுளகத்துக் கிடக்குமாற்றை இனி ஆராய்வாம்.

ஒருவரையொருவர் அடுத்துப் பயனடையவேண்டின் அடுப்பார் குறையுள்ளவராகவும் அக்குறை தம்மானே நிரம்பாதவராகவும், அடுக்கப்படுவார் அவர்வேண்டுவதுடையராகவும் அது கொடுத்தற்குரியராகவும் அதனை மறுது கொடுப்பவராகவும் இருத்தல்வேண்டும். அம்முறைமை ஈண்டு 'எல்லா உயிர்க்கும் ஏமம் ஆகிய' என்றதனுனும் பிறவற்றுனும் பெறப்படும். என்னை? சிவபெருமானை 'எல்லாவுயிர்க்கும் ஏமமாகிய அருந்தவத்தோன்' என்றதனுல் எல்லாவுயிரும் ஏமத்தை வேண்டிநிற்கும் குறையுடையன வென்பதும், தமக்குத் தாமே ஏமமாக மாட்டாதன வென்பதும், அவற்றிற்கு அவனே ஏமமாக நிற்பவனென்பதும், அப்பெற்றியே தனக்கு வேறேரேமம் வேண்டாத நிறையுடையனென்பதும் விளங்கநிற்றலின். இதனுல் அவன் தன்வயத்தனுதலறிக.

---

* வாழ்த்துவாம் வணங்குவாம் என்ருற்போலக் கூருது இயல்பெடுத்துரைத்தொழியினும் அது வாழ்த்தேயாமென்பது,

'படியை மடியகத் திட்டான் அடியினுல்
முக்காற் கடந்தான் முழுநிலம்—அக்காலத்
தாப்பனித் தாங்கிய குன்றெடுத்தான் சோவின்
அருமை யழித்த மகன்.'

என்ற நான்மணிக்கடிகைக் கடவுள்வாழ்த்துச்செய்யுள் முதலியவற்றுனும் அறியப்படும். இன்னனவெல்லாம் வருபொருளுரைத்தலென்க.

அவன் ஏமமாயினா னெனவே அவனது பொருளுடைமையும்* பெறப்படும். இன்னும் இவ்வடியானே குணங்கள் பிறவும் கொள்ளப்படும். என்னை? தன்வயத்தனாய்நிற்பவன் உணர்த்த வுணராது இயற்கையுணர்வை முற்றுமுடையனாய் நீக்க நீங்காது இயல்பாகவே பாசங்களின் நீங்கிநிற்பவனாய்த் தூயவுடம்புடைமையும் முடிவிலாற்றலுடைமையும் வரம்பிலின்பமுடைமையுமாகிய குணபூர்த்தியுடையனென்க. எனெனின் உணர்த்தவுணரும் சிற்றுணர்வுடையோர் உணர்த்த வுணராத முற்றுணர்வுடையோர்க்குப் பின்னிற்கவேண்டுதலானும், இயல்பாகவே நீங்காதபாசங்களுடையார் அவை இயல்பாகவே நீங்கிநிற்பாரை அடுத்துப் பாசநீங்கப்பெறவேண்டுதலானும், தொழற்குரிய தூயவுடம்பில்லார் அஃதுடையாரை அடையவேண்டுதலானும், முடிவிலாற்றலில்லார் தம்மாற் செய்தற்கரியவற்றிற் பிறருதவி வேண்டுதலானும், வரம்பிலின்பமில்லார் அக்குறைநீக்க அதனது பூர்த்தியுடையாரை அடுத்து வேண்டுதலானும் அவர் தம்வயத்தராகாமை யறிக.

இனி அவனை அருந்தவத்தோன் என்றதுணையானே பெறுவனவற்றைப் பேசுவாம்.

அருள் துறவறத்திற்குச் சிறந்துநிற்றலின் அத்துறவறம் அதனையின்றியமையாது நிற்றலானும், 'அந்தண ரென்போ ரறவோர்மற் றெவ்வுயிர்க்கும், செந்தண்மை பூண்டொழுக லான்.' என்பவாகலானும், பிறராற் செய்தற்கரிய தவத்தையுடையோ னென்றதனாற் பொருளுடைய அந்தணனென்றவாறாயிற்று. ஆகவே அவனையடுத்தால் அவன் அருள் செய்வா னென்பது கூறாமையே அமையும்.

'செயற்கரிய செய்வார் பெரியர் சிறியர்—செயற்கரிய செய்கலா தார்'

என அருந்தவத்தோரை விசேடித்துக் கூறுபவாகலின் அவன் செயற்கரிய செய்யவல்ல பெரியோனென்றவாறாயிற்று. ஆகவே அடைவார்க்கு அருள்செய்யவல்லவனென்பது அறியப்படும். அது பின்னர்ப் பெறப்படும்.

---

*அருளாவது தொடர்புபற்றாது இயல்பாக எல்லா உயிர்கண்மேலுஞ் செல்வதாகிய கருணையென்பர் பரிமேலழகர்.

'நிறைமொழி மாந்தர் பெருமை நிலத்து—மறைமொழி காட்டி விடும்' என்பவாகலின் அவ்வாறே இன்றும் நின்றுகாட்டும் தன்னுணை யாகிய மறைமொழியைத் தோற்றுவித்தவன் என்றவாறாயிற்று.

'குணமென்னுங் குன்றேறி நின்றார் வெகுளி—கணமேயுங் காத்த லரிது.' 'அந்தண ரென்போர்....பூண்டொழுக லான்' என்பவாகலின் ஒரோவழித் தீயாரை ஒறுத்தற்பொருட்டுத் தடுத்தற்கரிய வெகுளியை யுடையனாயினும் ஆங்கே மறித்துச் செந்தண்மைபூண்பவன் என்ற வாறாயிற்று. தீயோரைத் தெறுதலும் நல்லோரை ஆக்கற்காதலறிக. இதனாற் சாபாநுக்கிரகசக்தியுடையவ னென்பதும் தெளியப்படும். அதனைத் தன் யோகத்தையழிக்கமுயன்ற காமனை யெரித்ததூஉம் மறித்தும் அருள்செய்ததூஉமாகிய வாலாற்றான் அறிக. ஒன்னாரும் உவந்தாரும் தனக்கென்று இலனென்பதூஉம் இவ்வரலாற்றான் உணரப் படும். இத்தகையோர்க்கு ஒன்னாரும் உவந்தாரும் உளராகாமை 'ஒன்னார்த் தெறலும் உவந்தாரை யாக்கலும்—எண்ணிற் றவத்தான் வரும்' என்றவிடத்துப் பரிமேலழகர் 'முற்றத்துறந்தார்க்கு ஒன்னாரும் உவந் தாரும் உண்மை கூடாமையின் தவத்திற்கேற்றியுரைக்கப்பட்டது' என் றுரைத்தவாற்றானும் அறியப்படும்.

'சுவையொளி யூறோசை நாற்றமென் றைந்தின்—வகைதெரிவான் கட்டே யுலகு' என்பவாகலின் உலகெலாம் தன்னறிவின்கண்ணவாய் நிற்கும் பெரியோன் என்றவாறாயிற்று.

'தன்னுயிர் தானறப் பெற்றானை யேனைய—மன்னுயி ரெல்லாந் தொழும்.' என்பவாகலின், தன்னுயிர் தானறப் பெற்றவன் மன்னுயி ரெல்லாந் தொழும் மாண்பினனென்றவாறாயிற்று.

மற்றும் முக்குற்றமுமற்றவனென்றும் வினையினீங்கி விளங்குபவ னென்றும் இத்தகை மேதகவு பிறவுமுடையனென்றுங் கூறியவாறு மாயிற்று.

இன்னும் அவனையடைவார் அவையெலாமடைவரென்பதும் ஆயிற்று. அதனை, வேண்டுதல்வேண்டாமையிலானடிசேர்ந்தார்க்கும் அவ் வேண்டுதல்வேண்டாமையொழிதலின் யாண்டும் இடும்பையிலவெனனும் முறையான் உணர்க.

இப்பொருளெல்லாம் இவனை அருந்தவத்தோனென்றதுணையானே கிடைக்குமாயினும் அச்சொற்றொடர் பெரிதும் விசேடக்குறிப்புடைய தொன்றென்றுணர்தற்பாற்று. எனெனின் தவத்தானே வரப்பெற்ற மேற்கூறிய தகவுகளையுடைய ஏனையருந்தவத்தோரினும் இவன் இயல்பாகவே தன்வயத்தனாதலின் மேம்பட்ட சிறப்புடையனாத லறிக. இவன தருந்தவத்தியல்பை இனி யெண்ணுவாம்.

ஆத்துமதத்துவத்திற்கு உறுதிபயக்குந் தவஞ்செய்வாரே தங்கருமஞ்செய்வாரென்றும், மற்றைப் பிரகிருதிதத்துவசம்பந்தமாகிய லௌகிககருமங்களைச்செய்வார் தங்கருமஞ்செய்யாது மயக்கத்தால் அவற்றைத் தங்கருமமாகத் துணிந்து அவஞ்செய்வாரென்றும் ஆன்றோர் கூறுப. அதனைத் 'தவஞ்செய்வார் தங்கருமஞ் செய்வார்மற் றல்லா, ரவஞ்செய்வா ராசையுட் பட்டு' என்ற வள்ளுவர்வாக்கானும் அறிக.

அன்றியும்,

'கன்னியர்க் கமைவருங் கற்பின் மாநிலந்
தன்னையித் தகைதரத் தருமங் கைதர
மன்னுயிர்க் குறுவதே செய்து வைகினேன்
என்னுயிர்க் குறுவதுஞ் செய்ய வெண்ணினேன்.'

எனத் தசரதச்சக்கரவர்த்தி உலகுபுரக்குங் காரியத்தை நிலனென்னு நங்கையும் மலர்மன்னுமங்கையும் செய்த மாதவப்பயனாய் வந்து விராவரும் புவிக்கெலாம் வேதமேயென விளங்கிய இராமன்மேல்வைத்துத் தான் தவமேற்கொள்ள எண்ணித் தன் மந்திரக்கிழவர்முன் உரைக்குங்காலுரைத்தவாற்றானும் உணரப்படும். ஆனால் அத்தன்மைத்தாகிய தவத்தையும் இவன் தன்பொருட்டு வேண்டாதவனாதலிற் பிறர் பொருட்டே செய்தானவன். அதனை,

'.................................யோகிகட்
கெய்தா வொண்பொருள் கைவந்து கிடப்ப
ஞான முத்திரை சாத்தி மோனமோ
டியோகுசெய் திருப்பினு மிருக்கும்'......

எனக் குமரகுருபரசுவாமிகள் கூறுமாற்றானும் அறியலாம்.

இவ்வாறே தன்கருமமாகிய தவத்தையும் உலகின் துக்கநிவர்ரண மார்க்கத்தை யோர்தற்பொருட்டாக மேற்கொண்டமையானன்றே புத்த தேவனைத் 'தனக்கெனவாழாப் பிறர்க்குரியாளன்' என்பது சாலப் பொருத்தமுடைத்தாயிற்று.

இவ்வாற்றால் தன்பொருட்டன்றிப் பிறர்பொருட்டேயான தவமுந் தவத்தோரியல்புகளும் உடையனென்பதும், அத்தவத்தை ஏனை அருந்தவத்தோர்போலப் பெருமுயற்சியினாற் பெறாது இயல்பாகவே யுடையனென்பதும், ஆங்கே அத்தவத்தோரியல்புகளு முடையனென் பது அருந்தவத்தோ னென்றதனாற் குறிக்கப்படு மென்பதும் பெற் றாம்.

இனிக் கடவுள்வாழ்த்து மங்கலவாழ்த்தாகலின் அருந்தவத்தோ னென்றது மங்கலமாய்நிற்றலும் ஆராயற்பாற்று.

தவவேடம் மங்கலமானதென்ப தான்றோர் துணிபு (கீதாவாக்யம்). அருந்தவத்தோர்க்குத் துன்பமென்பதே இன்றாகலின் ஆங்கு மங்கலமே நிறைந்துநிற்கு மென்பதற்குத் தடையென்னை? துன்பமுள்ள இடத் தன்றே அமங்கலமும் உள்ளதென்க. பேரின்பத்தைப் பயக்கும் தவ வேடம் பெருமங்கலமுடைத்தாகுமன்றே? இதனால் அவன் நிறை மங்கலமுடையனென்பதும், அவனை அடைவார்க்கும் அஃது உளதா மென்பதும் அறியலாகும். மங்கலங்குறித்த சிவனென்னும் நாமம் அவனதன்றே? இங்ஙனே செய்யுண்முழுதும் மங்கலமாய்நிற்றல் ஆங் காங்கு உணர்ந்து பாராட்டத்தகும்.

இனி மற்றையடிகளையும் உற்றுநோக்குவாம்.

> 'கண்ணி கார்நறுங் கொன்றை காமர்
> வண்ண மார்பிற் றாருங் கொன்றை.'

என்பதனாற் கூறப்பட்ட கண்ணியும் தாரும், எருக்கங்கண்ணியும் அலரிமாலையும் சங்காரகாலக்குறிப்போடுகூடிய வெண்டலைமாலையும் போலாது, மங்கலமும் குளிர்ச்சியும் மகிழ்ச்சியும் முதலிய அளித்தற்கருத் துடைய விசேடணங்களாயிருத்தல் சிந்திக்கத்தகும். பின்னர் 'நீற வறியாக் கரகத்து' என்பதூஉம் இப்பெற்றியதே. மங்கலமொழி முதல் வகுத்தெடுத்துக்கோடல் மரபாகலிற் கண்ணியென்று தொடங்கப்

பெற்றது. அவ்வாறே மற்றும் கார், நறுமை, கொன்றை, காமர் முதலிய நற்பொருளிற் சீரிய கூரிய தீஞ்சொற்கள் புணர்த்ததூஉம் பெரிதும் நயம்பட்டதாகும். இனி,

'ஊர்தி வால்வெள் ளேறே சிறந்த
சீர்கெழு கொடியு மவ்வே றென்ப'

என்பதனல் அவனது ஊர்தியும் கொடியும் கூறப்பட்டுள்ளன. ஆனேறானவன் அவனணையாகிய நூல்களை வெளியிட்ட முதலடியவனாகிய முதற்குரவன். அவன துள்படுகருமத்தலைவன். இறைவன்முன்னர் அடியார்குற்றங்களை நீக்கி அவர்க்கருளல்வேண்டி அவரிடத்து அவனை விரைந்து சேர்ப்பிப்பவன். 'செய்பவளைக் குருவின்னருளாற் றிருத்தாள் வணங்கி' என்று கூறுமாறுபோல முதற்கண் வழிபடற் குரியவன். இவனையுடையா னெனவே பேருளுடைய இறையிடத்து இறையும் அருளாமைக் கிடமின்மை உறுதிப்படுவதாயிற்று. 'வால்வெள்' என்ற அடையால் அவ்வானேறானவனது பரிசுத்தமும், அவனை யடைவார் அதனை யடைவதும், அவனையுடைய இறைவனது தூயவுடம்புடைமையும் தோன்றுவதாகும். அறமே ஆனேறாயிற்றென்பதும் அரியே அஃதாயினனென்பதும் அவனெறிநின்றோர்துணி பாதலானும் சிங்கம் புலி காகம் முதலிய வூர்தியும் அரவம் காகம் முதலிய கொடியும் போலாது சிறந்துநின்றமை தோன்ற 'ஊர்தி......... அவ்வேறென்ப.' என்றமையானும் மிகுந்த மேம்பாடும் சிறந்த தூய்மையும் நிறைந்த மங்கலமும் பெறப்படும். இவற்றை யுடையனுயதூஉம் பிறர்க்கருளற்பொருட்டாதல் அறியற்பாற்று.

'கறைமிட றணியலு மணிந்தன் றக்கறை
மறைநவி லந்தணர் நுவலவும் படுமே.'

இஃது அழகாகாததும் அமங்கலமானதும் மறுவா யெல்லாரானும் இழிக்கப்படுவதுமாய கறை, இவன்செயலால் அழகாய் மங்கலமாய் மறைநவிலந்தணரானும் புகழப்படுவதாயிற் றென்னுங் குறிப்பைத் தருகின்றது. அம்மட்டோ? நஞ்சும் அமுதாயிற் றென்றவாறுமாயிற்று. ஆகவே இவன் செயற்கரியசெய்யவல்லவனென்பது வலியுறும். பிறர் அமுதுண்ணும்பொருட்டுத் தான் நஞ்சுண்டு அவரை உய்யக்கொண்டதனாலாய கறையாதலின் இவனது பேருளுடைமையும், இவன் எல்லாம் தன்பொருட்டன்றிப் பிறர்பொருட்டே செய்தலும் பெறப்படும்.

எனவே அடைவாரைப் பிறாற் செயற்கரியசெய்தும் காத்தலையே மேற்கொண்டுள்ளவ னென்பது கைப்படுநெல்லியாகும்.

'பெண்ணுரு வொருதிறனாகின் றவ்வுருத்
தன்னு ளடக்கிக் கரக்கினுங் கரக்கும்.'

பெண்ணுவாள் 'செய்யவளைக் குருவின்னருளாற் றிருத்தாள் வணங்கி' என முற்கூறியமுறையின் முன் வழிபடற்குரியவளாயும், இறைமுன்னர் அடியார்தோஷத்தை மறைத்து அருளவேண்டுபவளாயும், உலகிற்கு ஓர் அன்னையாயும் உள்ள அவன்சக்தி. அவ்வாறு அவள் வேண்டுதல் அருச்சுனன் தவநிலைவரலாற்றான் அறிதும். அறம் வளர்த்த அன்னையாகிய அப்பெண்ணோடுகூடிநிற்றலும் தன்பொருட்டன்றிப் பிறர்பொருட்டாதலைக் குமரகுருபரர்,

'யோக சாதனம் போகிகட் கின்மையிற்
செஞ்சடை விரித்து வெண்பொடி பூசி
யெருக்கங் கண்ணியுஞ் சூடி விருப்புடை
யிடப்பான் மடந்தை நொடிப்போழ்து தணப்பினு
மடலூர் குறிப்புத் தோன்ற விடலருங்
காமமீ தூர வேமுற் றிரந்தவள்
தாமரைச் சீறடி தைவந் தம்ம
புலவியிற் புலந்துங் கலவியிற் களித்தும்
போகமார்ந் திருப்பினு மிருக்கும்.'

எனக் கூறியவாற்றாற் கொள்க. உலகிற்கோ ரன்னையாகியாள் அவனிடத்தொருதிறனாய்நிற்றலானும், அவள் உலகெலா மொருகால் தன்னுள்ளே யொடுக்கி அவன் கூற்றினுள் ஒடுங்குதலானும்* வேறன்மை பெற்றாம். பெறவே உலகிற்கருளலில் அவற்குள்ள உரிமையும், மிக்க வேட்கையும், அவன் அவ்வாறருள்வது தவறா தென்பதும், அருளற்கு வேறொருவ ரிலரென்பதும் தெளிவாம்.

இனிப் பெண்ணுரு வொருதிறனாதலும் சிறந்த மங்கலங்குறித்தல் உணர்க. இவ்வடிகளானும், அருந்தவத்தோ னென்றதனானும் உலகின்பொருட் டிருவகையறமும் மேற்கொண்டவனென்பது விசதமாகும்.

---

* 'அவ்வுருத் தன்னுளடக்கிக் காக்கினுங் கரக்கும்' என்பதற்கு அப்பெண் வடிவு எல்லாப்பொருளையும் தன்னுள்ளேயடக்கி இறைவன்கூற்றிலே மறையினும் மறையுமென்பது மற்றுமோருரை.

'பிறைநுதல் வண்ண மாகின் றப்பிறை
பதினெண் கணனு மேத்தவும் படுமே'

இது, பேணற்பாடழிந்த குறைமதி அவனாலுஞ் சிரமேற்கொள்ளப்பட்டு அவனருளைப் பெற்றதனால் மற்றும் பதினெண்கணங்களாலும் ஏத்தவும்படும் மேம்பாடுற்றமையைக் கூறுகின்றமையின் அவனதாற்றல், அநுக்கிரகசத்தி முதலியவற்றிற்குச் சிறந்ததோர் காட்டாகநிற்கின்றது. பெருமான் பிறையைத் தன்பொருட்டுச் சிரமேற்கொள்ளாமையும் சிந்திக்கத்தகும். அவனை நுதற்கண் அனற்கண்ணுடைய னென்பவாகலின், தீயாரைத் தெறுதற்பொருட் டஃதுடையனாயினும் உவந்தாரை யாக்கற்குறிப்புத்தோன்ற அமுதகிரணனையும் ஆங்கே தரித்துளனென்ப திதனுள் தோன்றுமாறும் அது மங்கலமாமாறும் அறிக.

இனிக் கரகத்துக்குக் கங்கையென்று பொருள் கூறின் அவனது செயற்கரியசெய்கை முதலிய தோன்றும். என்னை? தன்னை எள்ளியுரைத்திழிந்த கங்கையைத் தன் சடையிற் 'புன்னுனித்தரு பனியென' அடக்கி, அவள்வேகத்தை ஆற்றி, அருந்தவஞ்செய்த பகிரதற்கு அருள் செய்தமையினென்க. அதனைப் பகிரதன் கங்கைகொண்டுவந்தவாலாற்றான் அறிக. மற்றும் அவன் தூயவுடம்பினனாதன்மேலும் அவனிடத்துள்ளன யாவும் தூயன என்பதூஉம் தோன்றும்.

இன்னும் இவன்நிலை இத்தகைத் தென்பது நம்மனோர் மனமொழி மெய்கட் கெட்டாததனால் இவன் கற்பனைகடந்துநிற்பவ னென்பது தோன்ற இவனைச் சடையும் கரகமும் தாங்கிய தாங்கருந் தவத்தோனென்றும், 'ஒட்டியகாத லுமையா ளொருபாலாக்-கட்டங்க வெல்கொடிக் கொண்டாலுங் கொண்டானே.' (பழமொழி) என்னுமாறு மனைவியொடு மகிழ்ந்து வாழ்பவ னென்றும், கண்ணியும் மாலையும் ஊர்தியும் அலங்காரமும் உடைய னென்றும் கூறியதனால் இவன் கடவுளென்பதூஉம் ஈண்டே பெறவைத்தவாறு மாயிற்று. இவன் கற்பனைகடந்துநிற்பவ னென்பது,

'ஆமையோ டணிந்து தலையோ டேந்திக்
காமரு மடந்தையர் கடைதொறுங் கடைதொறும்
பலிதேர்ந் துண்ணினு முண்ணு மொலிகழற்
பைந்துழாய் முகிலும் பழமறை விரிஞ்சனும்

இந்திரா தியரு மிறைஞ்சினர் நிற்ப
மற்றவர் பதங்கண் மாற்றியும் வழங்கியும்
பற்றலர்ச் செகுத்து மூற்றவர்த் தாங்கியும்
பரசுநர் பரசப் பணிகுநர் பணிய
வரசுவீற் றிருப்பினு மிருக்கு மூரைசெயின்
யோக சாதனம் போகிகட் கின்மையிற்
செஞ்சடை விரித்து வெண்பொடி பூசி
யெருக்கங் கண்ணியுஞ் சூடி விருப்புடை
யிடப்பான் மடந்தை நொடிப்போழ்து தணப்பினு
மடலூர் குறிப்புத் தோன்ற விடலருங்
காமமீ தூர வேமூற் றிரந்தவள்
தாமரைச் சீறடி தைவந் தம்ம
புலவியிற் புலந்துங் கலவியிற் களித்தும்
போகமார்ந் திருப்பினு மிருக்கும் யோகிகட்
கெய்தா வொண்பொருள் கைவந்து கிடப்ப
ஞான முத்திரை சாத்தி யோனமோ
டியோகுசெய் திருப்பினு மிருக்கு
..........................................
........................ கண்ணுதற்கடவுள்
கற்பனை கழன்று நிற்றலின்
நிற்பதிந் நிலையெனு நியமமோ வின்றே.'

(திருவாரூர் நான்மணிமாலை.)

என்ற குமரகுருபரர்கூற்றானும் அறிக.

இத்துணையுங் கூறியவாற்றானே இவன் பெரியோனென்பதும் இவனை வணங்கினால் இவன் இருவகையறத்திற்கும் தானே தலைவனாய் நிற்றலின் அவ்வறமும் அவற்றுள் இல்லறத்தின்வழிப்படுவனவாய பொருளின்பங்களும் துறவறத்தின் சாத்தியமான வீடும் அருள்வ னென்பதும் பெறப்படுமெனக. இவற்றின் அகலம் விரித்துரைகூறவல் லாரே யுரைக்கற்பாற்று.

மதுரைத்தமிழ்ச்சங்கமாணவர்
ஜெ. நாராயணசுந்தரமையங்கார்,
தமிழ்ப்பண்டிதர்,
இராஜாஸ் ஹைஸ்கூல், இராமநாதபுரம்.

௨

# கம்பராமாயண இன்கவித்திரட்டு.

[கஅ—ஆம் பக்கத் தொடர்ச்சி.]

## உருக்காட்டு படலம்.

அனுமான் சீதையைக் கண்டு இராமனைத் தான் அறிந்ததைத் தெரிவித்து ராமமுத்திரைமோதிரத்தைக் கொடுத்துத் தன் இயற்கையுருவத்தைக் காட்டுவதைக் கூறுவது.

### அனுமான் அரக்கியர் தூங்கும்படி மந்திரித்தல்.

அனுமான், 'சீதையிடம் சென்று பேசுதற்கு இதுவே சமயம். அதற்கு இடையூறாயிருக்கும் இராட்சசிகள், சீதையை வயப்படுத்தும் படி சற்றுமுன்தான், இராவணனால் பயப்படுத்தப்பட்டவர்களாதலால், தாமாகத் தூங்கார். இச்சமயம் இதுவே செய்யத்தக்கது' என்று ஒருமந்திர வித்தைசெய்தான். அவர்கள் செத்தாரொத்தாராய்த் தூங்கலானார்கள்.

### சீதை, இருத்தலோ, இறத்தலோ, நன்றென்று வாதித்து இறக்கத்துணிதல்.

சீதை, இராவணனும் இராட்சசிகளும் தன்னைக் கொன்றேவிடுவார் போன்று அச்சுறுத்தியதனால் அடைந்த அத்தியந்த மனவேதனையைப் பொறுக்கமுடியாமல், வாய்விட்டாற்றுதற்கும் அவ்வேதனையினின்று விடுதலையுறத் தன்னை மாய்த்துக்கொள்ளுதற்கும் தடையாயிருந்த இராட்சசிகளெல்லாரும் தூங்கக்கண்டு ('இப்போது யாரும் என்சொற்களைக் கேட்கவேணும் என்செயல்களைக் காணவேணும் செய்யார்' என்று நெஞ்சுள்நினைந்து வாழ்தலில் வெறுப்பும் மாய்தலில் விருப்பும் உடையவளாய்த் தன்னைக் கண்டுபேச முயன்றுகொண்டிருக்கும் அனுமான் அருகே மரக்கிளைமேலிருப்பதறியாதவளாய்) வாய்விட்டுப் புலம்புகின்றாள்:—

'கார்மேகமும் கருங்கடலும் கரியஇருளும் உருவுகொண்டாலொத்த திருமேனியையுடைய என் நாயகனைப் பிரிந்ததனால் வருந்தி யிறந்து

போகிற என் உயிரை நிலைபெறச்செய்ய, அவன் இலங்கைக்கு வருவானோ? வந்தவுடனே, பகைவர் திடுக்கிடும்படி பேரிடிபோலமுழங்கும் அவன் கோதண்டநாணொலியைக் கேட்பேனோ? விதியே விளம்புவாயாக'.

'சந்திரனே, சந்திரிகையே, இரவே, இருளே, உங்களில் ஒருவர் போதாதோ, என் உயிரை யொழித்தற்கு? நீங்களெல்லீரும் சேர்ந்து என்னை ஒருத்தியையே வருத்துகிறீர்கள். என்னை நினையாத அவனை வருத்தியிருந்தால், அவன் என்னைத் தேடிவந்திருப்பானே'.

'நாத! நீ வந்தேதீருவாயென்ற உறுதியான நம்பிக்கையினால் அளவற்ற துன்பங்களைப் பொறுத்துக்கொண்டு இறவாதிருந்தேன். அவ்வாறிருந்தது, ஆசைமிகுதியால் உன் பழைய கொடுமையை நினைவுகூராமையாலேயே. "காட்டுக்குவந்தால், வருந்துவாய்; வீட்டில் இரு: சில நாளில் திரும்பிவிடுவேன்." என்று பதினாலு வருடம் பிரிய ஒருப்பட்ட பொருளாளனன்றோ நீ! உன் அருள் இருந்தவாறு இஃதாதலால், இப்பொழுது என்னை மீட்கவாராமல் கொன்றுவிடுவாய்போலும்.'

72. 'பேணும்உணர் வே,உயி ரே,பெருநாள்
நாண் இன் றுழல் வீர்;தனி நாயகனைக்
காணுந் துணை யும்கழி வீரலிர்;நான்
பூணும்பழி யோடு பொருந்துவதோ?'

இ-ள். '(என் நாயகனைப் பிரியுமுன் என்னால்) பாதுகாக்கப்பட்டிருந்த என்உணர்வே, என் உயிரே, (அவனை யான் பிரிந்தவுடனே என் தேகத்தைவிட்டு நீங்கியிருக்கக் கடவீரான நீங்கள், பிரிந்தபின்) நெடுங்காலம் (நீங்கியொழியாமல் என் தேகத்தினுள்ளே) வெட்கமில்லாமல் சுழன்றுகொண்டிருக்கின்றீர்கள். என் நாயகனை யான் காணும்வரையும் நீங்கள் ஒழிவீரல்லீர். (நீங்கள் ஒழியாதவரை) நான் (இறவாமல்) பழியோடு பொருந்தி (யிருக்கவேண்டியிருக்கிறது. அப்படி) யிருப்பதோ (உங்கள் விருப்பு. நன்று, நன்று. நீங்கள் இன்பத்தோடு வாழ்தற்காக, நான் துன்பத்தோடு சாவாதிருக்கவேண்டும்போலும்.)'

பேணுதல் - பாதுகாத்தல். பேணும் என்பது, உணர்வுக்கேயன்றி உயிருக்கும் அடையாகக் கொள்ளும்படிநின்றது. நாண் - வெட்கம். இன்று, இல்லாமல் என்னும் பொருளுடைய இன்றி என்னும் எதிர்

மறைக் குறிப்புவினையெச்சத்தின் விகாரம். உழலல் - சுழலல். தனி நாயகன் - ஒப்பற்ற தலைவன். துணை - அளவு. கழிதல் - நீங்குதல்.

'நான்காமடிக்கு - நான் அடையும் பழியை நீங்களும் அடையப் போகிறீர்களோ? என்றும் கருத்துக் கொள்வர்'

இப்போது வாழ்வைவெறுக்கும்நிலையிலுள்ள சீதை, முன் வாழ்வை விரும்பும்நிலையிலிருந்த தன்னைப் பழிப்பதாக இக் கவிக்கருத்தைக் கொள்ளல்வேண்டும்.

இப்பாட்டில், சீதை, தான் வேறு, தன் உணர்வும் உயிரும் வேறு போலக் கூறும் விசேடம் ஆழ்ந்து ஆராய்தற்குரியது. கம்பர், துன்பு இன்பு அன்பு முதலிய உணர்ச்சிகள் அசாதாரணமாக அதிகப்பட்டால் அவைகளை நன்கு புலப்படுத்தற்கு ஒருவரை இருவராகவும் இருவரை ஒருவராகவும் அவ்வவ்வமயத்துக்குப் பொருத்தமாகப் புனைந்துரைப் பர்:—

கழிபெருந் துன்பத்தை விளக்க, ஒருவரை இருவராகக்கூறியதை இந்தப்பாட்டிலும், இறப்பவும் விஞ்சிய இன்பத்தைப் புலப்படுத்த ஒருவரை இருவராகக்கூறியதை இராமன் அயோத்திக்குத் திரும்பிவருவதைத் தெரிந்த பரதன்மெய்ப்பாட்டையுணர்த்தும்,—

வேதியர் தமைத்தொழும்; வேந்த ரைத்தொழும்;
தாதியர் தமைத்தொழும்; தன்னைத் தான்தொழும்;
ஏதும்ஒன் றுணர்குறு திருக்கும்; நிற்குமால்:
காதலென் றதுவும்ஓர் கள்ளின் தோற்றமே!

என்ற மீட்சிப்படலப் பாட்டிலும், உச்ச அன்பை உணர்த்த இருவரை ஒருவராகக் கூறியதை,—

* உருத்தெரி தன்மைய உயிரும் ஒன்றுதம்
அருத்தியும் அத்துணை ஆய நீரினர்,
ஒருத்தியும் ஒருத்தனும் உடம்பும் ஒன்றெனப்
பொருத்தின ராம்எனப் புல்லி னாரரோ.

என்ற உண்டாட்டுப்படலச் செய்யுளிலும் காணலாம்.

* இதன் பொருளைச் 'செந்தமிழ்' தொகுதி 22, நசுக—எக- பக்கங்களில் பார்க்க.

இந்தப் பாட்டிலும் இதனைத் தொடர்ந்துவரும் பாட்டுக்களிலும் சீதையின் வாழ்வை விரும்பும் எண்ணங்களோடு வாழ்வை வெறுக்கும் எண்ணங்கள் வாதாடி வென்றதன்பயனாகச் சீதை தன்னை மாய்க்கத் துணிதல் இயல்பான முடிவாயிருத்தல் காண்க.

73. 'முடியாமுடி மன்னன் முடிந்திடவும்,
படியேழும் நெடுந்துயர் பாவிடவும்,
மடியாநெறி வந்து வனம்புகுதும்
கொடியான்வரு மென்று குலாவுவதோ?'

இ-ள். '(தன் பிரிவாலன்றி வேறெந்தக் காரணத்தாலும்) சாவாத தசரதசக்கரவர்த்தி சாகும்படியாகவும் ஏழுலகங்களிலும் மிகுந்த துன்பம் பாவும்படியாகவும் (இரக்கமின்றி) வனத்துக்கு வந்துவிட்ட கொடியோன் (யான் ஒருத்தி துன்புறுதற் கிரங்கி என்னைச் சிறைமீட்க) வருவானென்று யான் மகிழ்(ந்துவாழ்)வது தகுதியோ? (வாரானென்று நிச்சயித்துச் சாவதே தகுதி.)'

படி - உலகம். பாவுதல் - பரவுதல். மடியா நெறி - (போகப் போகத்) தொலையாத (நெடு) வழி. புகுதுதல் - பிரவேசித்தல். வரும் - வருவான். குலாவல் - மகிழ்தல்.

'கொடியார் வரும்' என்ற பாடங்கொண்டார், '"கொடியார்" என்றது நிஷ்டூரவார்த்தை; கோபத்தினால் ஆண்பால் பலர்பாலாகக் கூறப் பட்ட பால்வழுவமைதி; இச் சொல், சொல்லாற் பலர்பாலாயினும் பொருளால் ஆண்பாலாதலால், "வரும்" என்னும் செய்யுமென்முற்றைக் கொண்ட வழாநிலையேயாம்' என்பர்.

['உயிர் உண்டெனில் துயரும் உண்டு. உயிரொழிந்தாலன்றித் துயரொழியாது. உயிரைப் போக்கலால் துயரைப் போக்கலேயன்றிக் கற்பைக் காக்க உயிரை நீக்கினாளென்னும் புகழைப் பூண்டேனு மாவேன்']

74. 'பொறையிருந் தாற்றிஎன் உயிரும் போற்றினேன்
அறையிருங் கழலவற் காணும் ஆசையால்
நிறையிரும் பல்பகல் நிருதர் நீள்நகர்
சிறையிருந் தேனை அப் புனிதன் தீண்டுமோ?'

இ-ள். 'என் நாயகனைக் காணவிரும்பியதனால் (அவனைப் பிரிந்த பின் நெடுங்காலம்) பொறுமையோடிருந்து (எல்லாத் துன்பங்களையும்) சகித்து(ப் பலமுறை போகத் துணிந்த) என் உயிரைப் (போகவொட்டாது தடுத்துப்) பாதுகாத்துவைத்துக்கொண்டிருந்தேன். மிகவும் நீண்டகாலம் இராக்கதர் ஊரிலே சிறையிருந்த(தனால் அசுத்தையாய்த் தீண்டத்தகாதவளாய்விட்ட) என்னை அந்தப் பரிசுத்தமூர்த்தி தீண்டுவானோ? (தீண்டான் - ஏற்றுக்கொள்ளமாட்டான்.)'

பொறை இருந்து - பொறுமை (யோடு) இருந்து; மூன்றும்வேற்றுமைத் தொகை. ஆற்றுதல் - சகித்தல் - பொறுத்தல். கழல் - வீரர் காலில் அணியும் ஆபரணம். அறை இருங் கழலவன் - ஒலிக்கின்ற பெரிய வீரகண்டையை யுடையவன் (ஆன இராமன்). பல் பகல் - பல நாள் - நெடுங்காலம். நிருதர் - இராக்கதர்.

75. 'உன்னினர் பிறரென உணர்ந்தும், உய்ந்தவர்
சொன்னன சொன்னன செவியில் தூங்கவும்,
மன்னுயிர் காத்திருங் காலம் வைகினேன்;
என்னின்வே றரக்கியர் யாண்டை யார்கொலோ!'

இ-ள். 'அன்னியர் (என்னைப்பற்றிக் காமாதுரமான) எண்ணங் கொண்டாரென்றுதெரிந்தபின்பு (உயிரைவிடாமல்) பிழைத்திருந்ததோடமையாமல் அவர்கள் (காதலாகச்) சொன்னவைகளெல்லாம் (காதிலே விழுந்து நெடிது) தங்கிநிற்கவும் (அவர்களது கெட்ட எண்ணந் தெரிந்தவுடனே விட்டுவிடாமல்) நிலைத்திருந்த உயிரை (அவர்கள் சொன்னவைகளைக் கேட்டவுடனேயாவது விட்டுவிடாமல்) பாதுகாத்து நெடுங்காலம் வாழ்ந்தேன். (ஆதலால் யானே இராட்சசி.) என்னைத் தவிர வேறு இராட்சசிகள் எங்கே உள்ளார்! (எங்கும் இலர்.)'

உன்னுதல் - எண்ணுதல். உய்தல் - சீவித்தல் - உயிர்வாழ்தல். சொன்னன - சொன்னவை. 'சொன்னன சொன்னன' என்ற அடுக்கு, சொன்னவைகளெல்லாம் என்றும் திரும்பத்திரும்பப் பலமுறை சொன்னவைக ளென்றும் பொருள்கொள்ளநின்றது. தூங்குதல் - இடையறாது விழுதல்; ஒலித்தல் (தமிழகராதி). மன் - நிலைத்த. இருமை - பெருமை; இங்கே நெடுமைகுறித்தது. இரும் காலம் - நெடுங்காலம்.

அரக்கியர், வன்னெஞ்சுடையார் என்ற பொருளையுணர்த்திநின்றது. யாண்டை - எவ்விடம்: யாண்டு, யாண்டை யென ஐகாரச்சாரியைபெற்று வந்தது.

சீதைபாற் காமுற்றுக் காதல்வார்த்தைகள் கூறினவன் இராவணனொருவனேயாதலால், 'உன்னினர் பிறர்' 'அவர்' என்பவை சொல்லாற் பன்மையாயினும் பொருளால் ஒருமையேயாம். பின்வரும் 'பிறர்மனை' என்ற பாட்டில் உள்ள 'பிறர்' என்பதும் அது.

76. 'சொற்பிரி யாப்பழி சுமந்து தூங்குவேன்
நற்பிறப் புடைமையும் நாணும் நன்றரோ.
கற்புடை மடந்தையர் கதையு ளோர்கள்தாம்
இற்பிரிந் துய்ந்தவர் யாவர் யானலால்?'

இ-ள். 'பழியை (நீக்கித் தள்ளிவிடாமல்) ஏற்றுக்கொண்டு (அதை நீக்கமுயலாது) சோம்பியிருக்கின்றேன். என் உயர்குடிப்பிறப்புடைமையும் நாணுடைமையும் மிக நன்றாயிருக்கின்றன! யானொருத்தியல்லாமல் (இக்காலத்துக் கற்புடையார் எவரும் கணவனைப் பிரிந்தபின் வாழ்ந்தவரில்லை.) கதைகளிற் கூறப்பட்ட முற்காலத்துக் கற்புடையோர் தாம் கணவனைப் பிரிந்தபின் பிழைத்திருந்தவர் யாவர் உளர்? (எவரும் இலர்.)'

சொல் - பேச்சு (தமிழுகாதி). சொல் பிரியாப் பழி - ('சீதை கணவனைப் பிரிந்தபின் செத்தாளில்லை' யென்று சனங்கள் கூடிக்கூடிப்) பேசும் பேச்சினின்று பிரியாத நிந்தை. நல் பிறப்பு - நல்ல (குடிப்) பிறப்பு. 'நல்ல குடிப்பிறந்தார் நல்கூர்ந்தாராயினும்' என்பதிற்போல 'நல்' என்பது உயர்ந்த என்ற பொருள்பட நின்றது. நன்று, இகழ்ச்சி குறித்தது. வழக்கமாக இல்லானையுணர்த்தும் "இல்" என்பது, இங்கே, இல்லாளனை யுணர்த்தியது. உய்தல் - உயிர்வாழ்தல்.

[தொடரும்.]

வெ. ப. சுப்பிரமணியமுதலியார்.

# மதிப்புரை.

ஸ்ரீவரமங்கைக்கலம்பகம்:—இது, ஸ்ரீவில்லிபுத்தூர் ஹிந்து ஹைஸ்கூல் தமிழ்த்தலைமையுபாத்தியாயரும் மதுரைத்தமிழ்ச்சங்கத்தினருளொருவரும், சேற்றூர்ச் சமஸ்தானவித்வானும், கவிபூஷணம் என்ற பட்டம்பெற்றவருமாகிய ரே. அப்புவைங்கார் என்ற நரசிம்மாசாரியரால் வானமாமலையிற் கோயில்கொண்டருளிய தேவநாயகஸ்வாமி விஷயமாகப் பாடப்பெற்றிருக்கிறது. இதிலுள்ள கலம்பகவுறுப்புக்கள் பலவும் மிகவும் சுவைமலிந்தனவாய் அமைந்துள்ளன. பாவும் இனங்களும் எழுத்துச் சொற் பொருள் யாப்பணி என்னும் இலக்கணங்களிற் சிதையாத திருந்திய செந்தமிழ்ப்பாடலாயியன்றுள்ளன. தமிழ்ப்புலமையளத்தற்குக் கட்டளையாயுள்ளது கலம்பகம் என்னும் பிரபந்தமே. அதனை இக்காலத்துப் பாடுவோர் மிகவும் அரியர். அவருள் இவரும் ஒருவரென்றெண்ணும்படி இப்பிரபந்தம் பாடப்பெற்றிருக்கிறது. இதற்கு அருமையான குறிப்புரையொன்றெழுதிச்சேர்த்து அச்சிட்டிருப்பது படிப்பவர்க்கு மிகவும் பயன்படத்தக்கது. இப்பிரபந்தம் இதனை ஆக்கியளித்தவர்புகழை இவ்வுலகில் என்றும் நின்று நிலவச்செய்யத்தக்கது.

ஸ்ரீவில்லிபுத்தூர் ஸ்தலபுராணம்:—இதுவும், ஸ்ரீவரமங்கைக்கலம்பகமியற்றிய கவிபூஷணம் ரே. அப்புவையங்காரென்ற நரசிம்மாசாரியரால், வடமொழியில் ஸ்ரீவராஹபுராணத்தினின்றும் திருந்தியசெந்தமிழ் நடையில் எழுதப்பெற்றது. இதில் வராஹக்ஷேத்திரமாஹாத்மியம் முதலாக ஸ்ரீவில்லிபுத்தூர் ஸ்தலவரலாறிடையாகத் திருமுக்குளத்தீர்த்தமாஹாத்மியம் இறுதியான வரலாறுகள் பல வரையப்பட்டுள்ளன. இத்தலபுராணத்தின் முதன்மையான விஷயம் பெரியாழ்வார், ஸ்ரீ ஆண்டாள் இவர்களின் அவதார வைபவங்களாம். அவர்களது அவதாரகாலம் நன்குவிளங்கும்படி ஜாதகங்கள் வரையப்பட்டுள்ளன. இப்புராணத்துக்குப் பாயிரமாகப் பழிச்சினர்ப்பணிதற்பாசுரங்கள் பல பாடிச்சேர்க்கப்பட்டுள்ளன. இப்புத்தகமொன்றே இதனை ஆக்கியளித்த புலவர்திலகர், வடமொழி தென்மொழி வன்மையும் தமிழ்நடையெழுதும் தன்மையும் செய்யுளியற்றுந்திறமையும் ஒருங்குடையரென்பதை நன்கு விளக்குவதாகும். இன்னும் இவர் செய்திருக்கும் பிரபந்தங்களும் உரைகளும் ஒன்றன்பின்னொன்றாக வெளிவருமாயின் தமிழுலகம் உவப்புடையதாகும். இதன் விலை அணா 6. வேண்டுவோர் ஆக்கியோர்க்கெழுதிப் பெறலாம்.

தமிழ்மக்கள் மாண்பு:—இது, யாழ்ப்பாணத்து வல்வெட்டித்துறைத் 'தமிழ்த்தொண்டன்' ஆசிரியர் ஸ்ரீமத். வ. மு. கனகசுந்தரம் அவர்கள் இயற்றியது. இதனுள் தமிழ்மக்கள் மாண்பு என்னும் பொருள் பற்றி உலக உற்பத்திக்காலம், தமிழ்வழங்கும் நிலம், சங்ககாலம், தமிழின் தெய்வநலம், தமிழ்மொழியின்மாட்சி, தமிழ்மக்களின் நாகரிகம் என்னும் விஷயங்கள் ஆராய்ந்தெழுதப்பட்டுள்ளன. இவற்றின் முடிபுகள் பலவும் புராதனமானகொள்கைகளையும், புராணேதிகாசச் சான்றுகளையும் பிறசான்றுகளையும் கொண்டு எழுதப்பட்டுள்ளன. தமிழர்செல்வத்தின் உயர்நிலையாராய்ச்சியில் வணிகர் இப்பர், கவிப்பர், பெருங்குடிவணிகர் என்னும்பட்டங்கள் பெறுமாறுகாட்டியிருப்பதும், மற்றும் ஆங்காங்கு வேண்டும் இதிகாசங்களும் பழம்பாடல்களுங்காட்டி எடுத்துக்கொண்டபொருளை நாட்டிச்செல்வதும் பாராட்டத்தகும். வேண்டுவோர் ஆக்கியோர்க்கெழுதிக்கொள்க.

யுவவருஷ வாக்கிய பஞ்சாங்கம்:—இது, யாழ்ப்பாணம் ஸ்ரீமத், சோ. வைத்தியநாதசாஸ்திரிகளால் கணிக்கப்பட்டது. இதில் வழக்கப்படி நாளும் கோளும் பிறவும்பற்றி இராசிச்சக்கரம் என்பது முதல் இலங்கைத்தபாற்செலவு என்பதுவரை (சற்றேறத்தாழ) நூறு விஷயங்கள் அடங்கியுள்ளன. அவற்றுள் விரததினங்களும் ஸர்வமுஹூர்த்தங்களும் சிராத்ததிதிமுதலியனவும் சாஸ்திரமுறைப்படி கணித்துக் குறிக்கப்பட்டுள்ளன; அன்றியும், கிருஷிகரும் வணிகரும் பிறரும் அறிந்துகொள்ளவேண்டிய பலவிஷயங்களும் சேர்க்கப்பட்டுள்ளன. சோதிடப்பயிற்சியில்லாதாரும் பிறருதவியின்றி எளிதில் அறிந்துகொள்ளுமாறு ஒவ்வொருநாளுக்கும் கி. பி. ஹூ மீ உ மஹமது ஹூ மீ உ களுடன் திதி வார நக்ஷத்திர யோக கரணங்கள் பிழையின்றிக் கணித்துப் பதிக்கப்பட்டிருத்தலால் இது எல்லார்க்கும் பயன்படத்தக்கதாயிருக்கிறது. இதன்விலை சதம் 25க்கு அணு 4. கிடைக்குமிடம்:— சோ. வைத்தியநாதசாஸ்திரிகள், கலாநிதியந்திரசாலை, பருத்தித்துறை, யாழ்ப்பாணம்.

---

### தலைவி பாணனை மறுத்தல்.

410. பொன்மேடை மாடக் கலைசைத் தியாகர் புரக்குநன்னாட்
டன்மேவு கூந்தலெங் கைமயி லாடவவ் வண்ணன்முன்னே
இன்மேக ராகக் குறிஞ்சியைப் பாடங்ங னிங்ஙனநீ
வன்மேதி தின்னிநில் லேல்போக போக மறுமனைக்கே. (க௮)

### வாயில்மறுக்கப்பட்ட பாணன் கூறல்.

411. செம்மேனி யப்பர் கலைசைத் தியாகரைச் சிந்தைசெயார்
தம்மேல் வினைவண்டு சூழ்ந்தெனக் கைக்கொண்டு தானெறிய
எம்மேல் விழுந்தகல் லிம்மேட தாயிற் றினிக்கல்லெடேல்
அம்மே யுனைவந் தனைபுரி வேன்சிவப் பாறுகவே. (க௯)

### விறலி வாயில் மறுத்தல்.

412. மறலியைக் காய்ந்த கலைசைத் தியாகரை வாழ்த்தலர்போல்
அறலிழி யக்கண் சுருட்டிக் கிடந்தியா னயர்வுறுங்கால்
விறலியிங் கெய்திச் சுருட்டி யெடுக்கும் விதியுளதோ
திறலிறைக் கானமின் னார்செவிக் கேசென்று தென்னிசையே.

---

410. அல் மேவு - இருள் மேவிய. எங்கை மயில் - என் தங்கையாகிய மயில்; எங்கையென்றது பரத்தையை. அங்ஙன் - பரத்தையர்சேரியில். மேதி - எருமை; மேதிதின்னி: "கன்றுபெறு வல்சிப் பாணன்" (நற். 310); "பொய்கொண்டு நிற்கலுற் றேபுலை யாத்தின்னி போந்ததுவே" சிற். 386.

411. வினை வண்டு - பாவமாகிய வண்டு. சிவப்பு - கோபம். "அறிந் திலரென்னக் கொதித்துப் புகையுயிர்த் தம்மவென்மேல், எறிந்தகற் போது மினிக்கல் லெடேலெம் பிராட்டிபந்தம், பறிந்திடச் செய்தருள் கோமுத்தி யீசர் பதியரசூர்ச், செறிந்தவர் போலுன தாள்பணி வேன்கதந் தீர்ந்தருளே" திருவாவடுதுறைக். 414.

412. மறலியை - யமனை. அறல் - நீர். கண்ணில் அறல் இழிய. சுருட்டிக் கிடந்து - முடங்கிக் கிடந்து. விறலி: விளி. சுருட்டி - ஓர் இராகம். "கண்சுருட்டி யோகர் கருத்தறிவெல் லாஞ்சுருட்டிப், பண்சுருட்டி பாடுமிசைப் பாடினியே" (விறலிவிடு தூது.) இறைக்கு ஆன மின்னார்; இறை - தலைவன். தென் இசை - இராகத்தைப் பாடு.

### கூத்தர்வாயில் மறுத்தல்.

413. சிதம்பர்க் கரியர் கலைசைத் தியாகர் திருநடங்கண்
டிதம்பெற் றிலாரி னிருப்பேற்குன் கூத்தினி தாகுங்கொலோ
நிதம்பத்தை விற்றுய்யும் பூவையர் பூரிக்க நீயங்குற்றுன்
மதம்பெற்ற வாட்டினைக் காட்டுக கூத்த மகிழ்நர்முன்னே. (உக)

### பாங்கிவாயில் மறுத்தல்.

414. மதலையைச் சூடுங் கலசத் தியாகர் வருமுதலில்
மதலையை யேந்தி கலைசைக் கணிகையர் மார்பிடையின்
மதலையைக் கைக்கொண் டுவப்புறு வாரென் வயிற்றுதித்த
மதலையைக் காணவின் றெய்தின்மின் னேயவர் வாஞ்சைநன்றே.

### விருந்தோடு வந்துழிப் பொறுத்தல் கண்டு தலைமகன் மகிழ்தல்.

415. இண்டைச் சடையர் கலைசைத் தியாகர்க் கினியதிருத்
தொண்டைத்தொன் னாடனையாடனி தீர்ந்திவடொண்டைச்செவ்வாய்க்
கண்டைப்பொருமின்சொற்கேட்டிளமூரலுங்கண்கள்கொண்டென்
பண்டைத் தவங்கல் விருந்துரு வாய்வரப் பார்த்தனமே. (உரு)

---

413. சிதம்பர்க்கு - கீழ்மக்கட்கு. பெற்றிலாரின் - பெறுதவரைப்போல. மதம் பெற்ற ஆட்டினை - களிப்பினையுடைய கூத்தை. ஆட்டினை - கூத்தை, ஆட்டுக்கிடாயை; சிலேடை.

414. மதலையைச் சூடும்-கொன்றையை அணியும். முதல் இல் மதலையை - தலையை. ஏந்தி - ஏந்தியவராது; பெயர். மார்பில் உள்ள இடையில்லாத மதலை; என்றது மலைபோன்ற தனத்தை. மதலையை - பிள்ளையை. நன்று - நன்றன்று என்றபடி; குறிப்பு.

415. இண்டை - ஒருவகை மாலை. தொண்டைத்தொன்னாடு - தொண்டைநாட்டை. தொண்டை - கொவ்வைக்கனி; வாய்க்கு உவமை. கண்டை - கற்கண்டை. மூரலுங் கண்கள் கொண்டு பார்த்தனமே.

பி. ம். 'துயர் தீர்ந்து'

### தலைவன் சீறேலென்றவள் சீறடி தொழுதல்.

416. ஒறுத்தார்க் கொருபொழு தின்பம் பொறுமை யுடையவர்நீர்
நிறுத்தா ருரைப்பர் கலைசைத் தியாகர்க்கு நேசம்வையார்
செறுத்தா லெனக்கதஞ் செய்யேல் பிழைபல செய்திடினும்
பொறுத்தா ரருள்செயுஞ் சிற்றடி பற்றினன் பொற்றொடியே. ()

### ஈது எங்கையர் காணின் நன்றன்றென்றல்.

417. தங்கச் சிலையர் கலைசைத் தியாகர் தழைந்துசந்த
தங்கச்சி மேயவர் நாடுடை யீர்செழுந் தண்ணறுஞ்சந்
தங்கச் சிடுந்தனந் தோயவென் றூடலை தாங்குதலென்
தங்கச்சி மைக்கெண்டை கண்டா லுமக்குச் சழக்குறுமே.(உரு)

### அங்கவர் யாரையும் அறியேனென்றல்.

418. வடிவாள் விழிவடி வேதுனி தீர வருட்டியுஞ்சீ
றடிவாரி சம்பிடித் துந்தணி யாவிதெ னன்பர்வினை
கடிவார் கலைசைத் தியாகேசர் தோய்சிவ கங்கையிலே
படிவார் படிய நினைப்பர்கொல் புல்வாய்ப் பனிப்புனலே. (உகூ)

---

416. "ஒறுத்தார்க் கொருநாளை யின்பம் பொறுத்தார்க்குப், பொன்றுந் துணையும் புகழ்" என்பது குறள். நீர் நிறுத்து - தன்மையை அளவிட்டு. ஆர் உரைப்பர்: நீர்மை சொல்வதற்கு அரியதென்றபடி. கதம் - கோபம்.

417. தங்கச்சிலையர் - மேருமலையை வில்லாகவுடையார். சந்ததம் கச்சி மேயவராது. சந்தம் கச்சு இடும் தனம்; கச்சிடும் (கைக்கும்) தனம் என்பது ஒரு குறிப்பு. தாளைத் தலையில் தாங்குதல் - பணிதல். தங்கச்சி - தங்கை; என்றது பரத்தையை. கெண்டைகளென்றது அவள் கண்களை. சழக்கு - துன்பம்.

418. வடி - கூர்மை. வடிவே - வடிவத்தையுடையாய். வருட்டி - வற்புறுத்தி. தணியா இது என். புல் வாய்ப்பனிப்புனல் - புல்லின் நுனியிலுள்ள பனித்துளியில்.

## காமக்கிழத்தியைக் கண்டமை பகர்தல்.

419. நங்கான் முளைவிளை யாடத் தெருவிடை நாடிக்கண்டே
பொங்காசை யாய்த்தழு வாவுச்சி மோப்பவுண் புத்திரனே
தங்காயிவ் வீடுன்ன தேவா வெனத்தலை சாய்த்துச்சென்றாள்
கங்கா தாரெங் கலசத் தியாகர் கலைசைமின்னே. (உஎ)

## தலைவியைப் பாங்கி தணித்தல்.

420. இகலிரு ணீக்குங் கலைசைத் தியாகர்க் கினியதிருப்
புகலியன் னையமன்ன ருன்னடி சூடவும் பொங்கனன்றோ
அகலிகைக் காசைப்பட் டாயிர மம்பக மம்மகவான்
உகலின்மெய் பெற்றுவந் தும்மிந்தி ராணி யுவர்த்திலளே. (உஅ)

## தலைமகன் ஊடல்.

421. தீராப் பழவினை தீர்க்குங் கலைசைத் தியாகர்வெற்பிற்
போராசைப் பட்டயர் பேதைநெஞ் சேவஞ்சம் பெற்றவிவள்
நாராய நீத்தன் றுயிர்த்துணை யாகி நமைக்கலவா
வாரா வழியி லடிநோவ வந்த மயிலல்லளே. (உகூ)

## பாங்கி அன்பிலை கொடியை யென்றல்.

422. கரும்புள் ளுவமையில் சாறெனச் செல்வியைக் கண்டுண்டநீர்
துரும்புள் ளுவரென வெண்ணிவிட் டீரின்று தொல்கலைசை
இரும்புள் ளுவந்தவன் போற்றுஞ் சிதம்பர வீசர்த்தொழார்
தரும்புள் ளுவமொழி நூலின்மின் னார்த்தண வாதிருமே. (௩0)

---

419. கான்முளை - பிள்ளை. பொங்கு ஆசையாய். வா என - வா என்று யான் சொல்ல. மின் - மின்போல்பவளாகிய காமக்கிழத்தி. மின் சென்றாள்.

420. இருள் - அஞ்ஞானமாகிய இருட்டை. புகலி - சீகாழி. பொங்கல்- கோபித்தல். அம்பகம் : சிலேடை; ஒன்று கண்; மற்றொன்று இடக்கர்ப் பொருள். உகல் இல் - உகுதல் இல்லாத. உவர்த்திலள் - வெறுத்தாளில்லை.

421. அயர் - வருந்துகின்ற. நார் ஆயம் - அன்பையுடைய தோழிமார் கூட்டத்தை. கலவா - கலந்து. வாரா வழியில் - பாலைநிலத்துவழியில்.

422. கரும்பு உள் - கரும்பின் உள்ளே இருக்கின்ற. கண்டு உண்ட. துரும்பு உள் உவர் என-துரும்பினுள்ளேயுள்ள உவர்நீர் என்று; துரும்பென்றது கரும்பின் கொழுத்தாடையை. புள்ளுவம் மொழி நூல் - வஞ்சனையை மொழி கின்ற நூல்களை; புள்ளுவம் - வஞ்சனை.

### பாங்கி தலைவற்கு மகப்போறறைகூர்ந்தவண்ணம் உரைத்தல்.

423. இச்சைவ நாதர் கலசத் தியாக ரெழிற்கலைசைச்
செச்சையம் பூவண்ண மானுள் சிறுவற் றரித்தசெவ்விக்
கொச்சையில் லாமற் றமதெழில் பெற்றன கொற்றவமால்
பச்சையம் பாயலு நீலமு மின்னும் பவளமுமே. (ருக)

### தலைவன் புதல்வனைக் காண்டல்.

424. கோவுந் தனமு மறையோர்க் களித்தலர் கூரவியும்
கோவும்பர்க் கேற்றிக் கலைசைத் தியாகரைக் கும்பிட்டெந்தக்
கோவு மிவற்கொப்பி லென்றே புலவர்கள் கூறவிரு
கோவுங் களிப்பப் பொருளைக்கண் டேந்தினன் கொற்றவனே. ()

### தலைவன் பள்ளியிடத்து அழுங்கல்.

425. தமக்காரு நேரில் கலைசைத் தியாகர்தந் நாட்டினிற்ப
துமக்கா டுறுதடத் தன்னமன் னீரிரு தோளொடுங்கு
குமக்கான் முலையும் புதுப்பூ வணைபது கொள்ளநல்கி
எமக்காக வின்று பழம்பூ வளித்தனி ரென்செய்வதே. (ருரு)

---

423. பாயல் - ஆலிலை. நீலம் - நீலமலர். மின் - மின்னல். வயிறு, கண்கள், இடை, அதரம் இவற்றுக்குத் தோற்று அழகிழந்திருந்த ஆலிலை முதலியனவைகள் இவள் கருவுற்ற நாளில் தமக்குரிய பண்டைக் கவின்பெற்றன; இவளுறுப்புக்கள் வேறுபட்டிருந்தன என்றபடி; திருவாவடுதுறைக்கோவை, 426-ஆம் செய்யுளைப் பார்க்க; "சிலந் தகைபெறு சாலியன் ஞள்சிறு வற் றரித்த, காலந் தமது கவினிறம் பெற்றன காலமின்னும், கோலந் தருஞ்செங் குமுதமு நீலமுங் குன்றெடுத்த, பாலன் துயில்கொண்ட பாயலுங் காலைப் பதுமமுமே" அம்பிகாபதிகோவை.

424. கோ - பசுக்கள். அலர்கூர் - பூக்கள்மிக்க. கோ உம்பர்க்கு; கோ - விண்ணுலகம். எந்தக்கோவும் - எந்த அரசனும். ஒப்பு இல். இரு கோவும் - இரண்டு கண்களும். பொருளை - பிள்ளையை.

பி. ம். 'புலவர் குலவ'

425. பதுமக் காடு - தாமரைக்காடு. குங்குமக்கான்; கான் - நறுமணம். பழம்பூ என்றது கூந்தலில் அணிந்த பூவை. இத்துறை புறங்காட்டலென்றுங் கூறப்படும்.

### காமக்கிழத்தி வாயில் வேண்டல்.

426. திருப்பங் கயத்தடஞ் சூழுங் கலைசைத் தியாகர்வெற்பர்
விருப்பங் கயலிடத் தேசென் று மீள்கினு மேதகுநீ
உருப்பங் கயமை யுடையோரிற் செய்த லுனக்கழகே
பொருப்பங் கயமருப் பேர்முலைச் செல்வி பொறுத்தருளே. ()

### பாங்கி வாயில்நேர்வித்தல்.

427. ஆமேவு பாலனை யாரணி மாத ரவர்க்கருந்தும்
பூமேவு மன்னமன் னூர்கழற் காளையர் பூங்குழையாய்
நீமேலெங் கும்பசப் பூரநின் றேங்குமிந் நீர்மையென்னே
நாமேவி யேத்துங் கலைசைத் தியாகர்நன் னாட்டகத்தே. (௩௫)

### மகனும் ஆற்றாமையும் வாயிலாகத் தலைமகன் வந்துழித் தலைமகள் எதிர்கோடல்.

428. நெறியாய்ந்த மேலவர் வேட்கைக் கடும்பரி நெஞ்சுறினும்
சிறியா ரிடத்திற் செலுத்துவ ரோசிவ காமியிடம்
பிரியாமல் வாழுங் கலைசைத் தியாகர் பெருவரங்கொள்
பொறியாள ரான புனலூரர் காமமும் புகல்வதன்றே. (௩௬)

---

426. விருப்பு - விருப்பத்தைப்பெற்ற. விருப்பு அங்கு அயலிடத்தே; அயலிடம் - பரத்தையிடம். உருப்பம் - கோபத்தை. கயமை - கீழ்மை. உருப்பம் செய்தல் உனக்கு அழகன்று. பொருப்பு அம் கயம் மருப்பு; கயம் - யானை.

427. ஆம் மேவு பால் - நீர் கலந்த பாலை. அன்னம் - அன்னப்பறவை. மேல் எங்கும் - உடம்பெங்கும்.

பி.ம். 'ஆமேறுபால்'

428. வேட்கைக்கடும் பரி - காமவேகம்; பரி - குதிரையுமாம். பொறியாள ரான - அறிவையுடையவரான.

### தலைமகன் நீங்கியபின் வந்த பாங்கியோடு தன் மகனைப் புகழ்தல்.

429. கலனுகங் கைக்கொள் கலசத் தியாகர் கலைசையன்னாய்
கலநாரங் கான்றவென் கண்ணைத் துடைத்தன்பர் காமுறமங்
கலநாளு மோங்கிடத் தந்தானென் மைந்தனிற் காந்தைக்குநன்
கலனு வதுநன்மக் கட்பே றெனும்பயன் கண்டனமே. (௩௭)

### தலைவி தலைமகனைப் புகழ்தல்.

430. ஒருகேடில் கொம்பர் கலசத் தியாக ருறைகலைசைக்
கொருகே சரியன்ன வன்பர்நம் பாலன் றுயிரின்வைத்த
ஒருகேண்மை யின்று மொருவாமற் கூடி யுவப்புறலால்
ஒருகே ளிருமில்லை கண்டாய்கொண் டானி னுலகிடத்தே. ()

### பாங்கி தலைவியைப் புகழ்தல்.

431. பாலிநன் னுடர் கலைசைத் தியாகர் பதம்பணியார்
போலிவர் செய்பிழை யெல்லா மறந்து புரிவுடனே
வாலிதின் மிக்கு மகிழ்ந்தெம் பிராட்டி வணங்குதலாற்
சாலியும் போற்றுந் தவமுடை யாளென்று சாற்றுவனே. (௩௯)

---

429. கலனு கம் கைக்கொள் - உண்கலனுகத் தலையைக் கையிலே கொண்ட; ககரவொற்றுத் தொகுத்தல்விகாரம். கல நாரம் - கல அளவாகிய நீரை. காமுறவும் மங்கலம் நாளும் ஓங்கிடவும். இல் காந்தைக்கு - இல்வாழ்க் கைக்குரிய ஒரு மங்கைக்கு. "மங்கல மென்ப மனைமாட்சி மற்றதன், நன்கல நன்மக்கட் பேறு" (குறள், 60) என்பதைத் தழுவி வந்தது இச்செய்யுளின் ஈற்றடி.

430. கொம்பர் - கொம்பு போன்ற தோழியே; விளி. கேசரி - சிங் கத்தை. அன்பர் - தலைவர். அன்று - எதிர்பட்டகாலத்தில். ஒருவாமல் - நீங்காமல். கேளிர் - உறவினர். கொண்டானின் - கணவனைக்காட்டிலும்; "கொண்டானிற் றுன்னிய கேளிர் பிறரில்லை" நான்மணிக். 56.

431. இவர் என்றது தலைவனை. புரிவுடன் - அன்புடன். வாலிதில் - தூய்மையின்கண். சாலி - அருந்ததி.

## உகூ. கல்வியிற் பிரிவு.

### கல்வியிற்பிரிவு தலைவன் பாங்கிக்கு அறிவுறுத்தல்.

432. பானற்கண் ணாய்தென் கலைசைத் தியாகர் பரிந்தளிக்கும்
ஞானக்கண் போலுநற் கல்விகண் டாயித்தை நாடிக்கல்லார்
ஈனக் கணிகையர் நெஞ்சவஞ் சத்தி னிருள்புதைப்ப
ஊனக்கண் கொண்டிங் குழிதரு வார்பய னென்றிலரே. (க)

### பாங்கி விலக்கல்.

433. ஒருதா துவைமுன் பலதாது வாக்கி யுயிரளித்தே
விருதாளுஞ் சண்பையர் மன்போ லிவளுயிர் மீட்கும்வித்தை
கருதார்க் கரிய கலசத் தியாகர் கலைசைமன்னா
இருதாறும் வைகியுங் கற்பா யெனிற்செல்க விப்பொழுதே. (உ)

---

432. பானல் - கருங்குவளைமலர். கல்வி ஞானக்கண் போலும். இத்தை - இக் கல்வியை; வழக்கு. வஞ்சத்தின் - வஞ்சம் போல. இருள் - அறிவின்மை. கல்லார் உழிதருவார் பயனிலர்.

433. ஒரு தாது - எழு தாதுக்களில் ஒன்றாகிய என்பு. பல தாது ஆக்கி - பலதாதுக்களாலாகிய உடம்பாக்கி; "அறைவட மொழிந வின்ற பாணினி யகத்து நாண, இறையமர் மயிலை மூது ரிருந்தவோர் தாது கொண்டே, நிறைதா வொராற மேலு நிரப்புதென் மொழிந வின்ற, மறையவன் காழி வேந்தன் மலரடிக் கன்பு செய்வாம்" (கண்டதேவிப்புராணம்.) விருது - வெற்றி. சண்பையர் மன் - திருஞானசம்பந்தமூர்த்திநாயனர். இருது ஆறு-கார்முதலிய ஆறு பருவமும். திருஞானசம்பந்தமூர்த்திநாயனர் என்பைப் பெண்ணாக்கிய வரலாறு இங்கே அறிதற்குரியது. "ஓது வதற்கண்ண லேபிரிந் தாலொண் மயிலையென்பு, மாது படுத்தினர் போலோதி வாரும் வருந்தமிழைக், கோது பிரித்தறி கோமான் குலோத்துங்கன் கோழிவெற்பில், தீது படக்கொடி யாவிசென் றாலுந் திருப்பு கைக்கே" (குலோத். கோ. 479); கோடீச்சுரக்கோவை, 422-ஆம் செய்யுளையும் அதன் குறிப்புரை முதலியவற்றையும் பார்க்க.

தலைவன் பாங்கியை உடன்படுத்தல்.

434. இடையற்ற கல்வியிற் பாய்மன மோர்நிலை யெய்து தற்கே
தடையற்ற கல்வி யொருதலை யாப்பெறத் தக்கதுமால்
நடையற் றவர்வாழ் கலைசைத் தியாகர்நன் னாடனையாய்
கடையற்ற கல்வியென் றேயேவ லாம்வினை கட்டுரையே. (௩)

பாங்கி உடன்படுதல்.

435. வல்வினை தீர்க்கு மருந்தாய்த் தெரிந்திட வல்லவர்க்குத்
தொல்விதி யேய்ப்ப வெழுமைப் பிறப்புந் தொடர்ந்துதவும்
கல்வியென் றுலகீ தியாவருங் கற்குங் கடனுளதே
நல்விதி போற்றுங் கலைசைத் தியாகர்நன் னாட்டகத்தே. (௪)

தலைவிக்குப் பாங்கி அறிவுறுத்தல்.

436. வயவா ணயனி கலசத் தியாகர் மகிழ்ந்தருள்பங்
கயவாவி சூழுங் கலைசையர் போற்கல்வி கற்றிலர்தாம்
பயவாக் களரனை யரென்று கூறியுன் பான்பிருந்த
தயவா ரிதியைவைத் தார்படர்ந் தாரத் தழற்சுரமே. (௫)

---

434. இடையற்ற கல்வியின் = கவியின் - குரங்கைப் போல. ஒருதலையா - உறுதியாக, கல்வி பெறத்தக்கது. மால்நடை - மயக்கத்தையுடைய ஒழுக்கம். கடையற்ற கல்வி = கல் - கற்பாயாக. ஏவலாம் வினை - ஏவல் வினைமுற்றை; என்றது கல்லென்பதை.

435. விதி ஏய்ப்ப - ஊழை ஒப்ப. எழுமைப் பிறப்புந் தொடர்ந்துதவும்: "ஒருமைக்கட் டான்கற்ற கல்வி யொருவற், கெழுமையு மேமாப் புடைத்து" (குறள், 398.) நல்விதி - பிரமதேவர்.

436. வாள் நயனி - வாளைப்போன்ற கண்களையுடையாய். பங்கயவாவி- தாமரைமலரையுடைய தடாகம். கலைசையர் - கலைசையில் உள்ளவர்கள். பயவாக் களர் - பயன்படாத களர்நிலம்; "உளரென்னு மாத்திரைய ரல்லாற் பயவாக், களரனையர் கல்லா தவர்" (குறள், 406.) தயவாரிதி - அருளாகிய கடல்; தய: ஆகாரம் தமிழ்விதிப்படி குறுகிற்று. படர்ந்தார் - சென்றார்.

ஸ்ரீ-ம். 'தயவாநிதி'

### கார்ப்பருவம் கண்டு தலைவி வருந்தல்.

437. மடலவிழ் கோதை கலைசைத் தியாகர்முன் மார்க்கண்டர்க்கா
மிடலடு கூற்றுவ ஞர்த்துவந் தென்னவிவ் வேலையுண்ணுப்
படலமை மேகமென் ஞருயிர் சோரப் பரந்துங்கல்விக்
கடலருந் தச்சென்ற மேகநம் பால்வரக் காண்கிலமே. (சு)

### தலைவியைத் தோழி ஆற்றுவித்தல்.

438. அத்தி நிசாசரர் தாமே கடைய வமிர்தமண்மேல்
அத்தி பெயர்க்கவந் தார்த்தா லெனக்கா ரதிர்ந்துறலால்
அத்திவெண் டாமர் கலைசைத் தியாகர்வெற் பண்ணல்பொற்றேர்
அத்திரம் போற்கண்ணி யின்றே வருநம் மணிநகர்க்கே. (எ)

## ௩௦. காவற்பிரிவு.

### தலைவன் பாங்கிக்கு அறிவுறுத்தல்.

439. தொல்லற மோங்கும் கலைசைத் தியாகர் சுருதிவழி
நல்லறங் காக்கவுந் தீதற நீக்கவு நானிலக்குச்
செல்லறங் காமனுஞ் செல்லு தலைச்செய்வ தேகடனும்
அல்லற னேர்குழ லாய்நாடு காவ லரசருக்கே. (க)

### தலைவிக்குப் பாங்கி அறிவுறுத்தல்.

440. அக்கா தரமொழித் தெல்லா வுயிர்க்கு மருள்கலைசைத்
திக்காடை கொண்ட சிதம்பர வீசர் திருவருளால்
இக்கா சினிமுற்றுங் காப்பான் றிருவுளத் தெண்ணினரால்
மைக்காவி போல்வண்ணக் கண்ணெம் பிராட்டிநம் மன்னவரே.()

---

437. கோதை: விளி. வேலை உண்ணு - கடலை உண்டு. படலமை மேகம் - கரிய மேக படலம்.

438. அத்தி - கடலை. அத்தி பெயர்க்க - மலையைப் பெயர்க்க. நிசாசரர் அத்தியில் அமிர்தங்கடைய மண் மேல் வந்து அத்தி பெயர்க்க ஆர்த்தா லென்ன. அத்தி வெண் தாமர் - என்பு மாலையை அணிந்தவர். அத்திரம்போல்- அம்பைப்போலும்.

439. தீது அற நீக்கவும். நானிலத்திற்கு, செல்லல் தங்காமல்; செல்லல் - துன்பம். அல்லையும் அறலையும் நேரும்; அறல் - கருமணல்.

440. அ காதரம்; அ: உலகறிசுட்டு; காதரம் - அச்சம். காவி - கருங்குவளை மலர். மன்னவர் எண்ணினர்.

### தலைவி கூதிர்ப்பருவம் கண்டு வருந்தல்.

441. நிவல வேலன்ன கண்ணுய் கலைசைத் தியாகருள்
ஏவல்கொண் டேகொண்ட லெங்குஞ் சொரிந்துமி னெஞ்சிநின்ற
தூவல்கொண் டேவட கால்சுற்று நாளிவை தோன்றலகொல்
நாவலந் தீவெனு மிப்படிக் காவ னயந்தவர்க்கே. (ங)

### தலைவியைத் தோழி ஆற்றுவித்தல்.

442. ஆவினஞ் சேற்குங் கலைசைத் தியாகருக் கன்பிலர்போற்
பூவினங் காய்வருந் தேனம் புரவலர் பூக்கழற்கால்
மேவினர் கையுறை யும்பகைத் தார்தம் விருதுங்கொண்டே
மாவினன் வையத்தில் வந்தெனத் தேர்மிசை வந்தனரே. (ச)

## ருக. தூதிற் பிரிவு.

### தலைவன் பாங்கிக்கு அறிவுறுத்தல்.

443. கூடாத வெம்பகை கூர்ந்திரு வேந்தர் கொடுஞ்சமரின்
வீடாமற் சென்று விலக்குபு மீண்டு வருந்துணையும்
சேடார் கலைசைத் தியாகேசர் தண்டக தேசமன்னுப்
சூடா மணியனை யாடுளங் காவகை சொல்லுகவே. (க)

---

441. எஞ்சிகின்ற - மிக்குகின்ற. தூவல் - தூவுதல். வடகால் - வாடைக் காற்று. படி - தேசம்.

442. ஆவின் அஞ்சு ஏற்கும் - பஞ்சகௌவியத்தை ஏற்றருளும். ழி-ம். ஆவினஞ் சேக்கும் - பசுக்கூட்டங்கள் தக்கப்பெற்ற. பூவில் நங்காய் - திருமகள்போல்வாய். வருந்தேல். கழற்கால் மேவினர் கையுறையும் - அடி பணிந்த அரசர் கொடுத்த கையுறையையும். விருது - கொடிமுதலியவை. இனன் - சூரியன். வையத்தில் - தேரில்.

443. கூடாத - சேராத. கூர்ந்து - மிக்கு. வீடாமல் - இறவாமல். விலக்குபு - விலக்கி. சேடு - பெருமை. அனையாள் துளங்காவகை.

### தலைவிக்குப் பாங்கி அறிவுறுத்தல்.

444. அத்தலை யோரிரு கோக்கண் மிகைகொண் டமரிழைக்கும்
இத்தலை சேருங்கன் மாற்றுதல் வேண்டியங் கேகலுற்றார்
பைத்தலைத் துத்திப் பணிமணி யல்குற் பணிமொழியாய்
நத்தலை வாவிக் கலைசைத் தியாகர்நன் னாட்டன்பரே. (உ)

### தலைவி முன்பனிப்பருவம் கண்டு வருந்தல்.

445. திருவேள்வி யந்தணர் செய்யுங் கலைசைத் தியாகர்நன்னாட்
டிருவேற் றரசர் பகைமாற்றச் சென்றவ ரெண்ணிலர்கொல்
உருவேற தாய்மங்கு றெற்கோட யாரு மூடன்மறைக்க
மருவேறு பற்பங்கள் பற்பங்க ளாக வரும்பனியே. (ங)

### தலைமகளைத் தோழி ஆற்றுவித்தல்.

446. விரையுந்து கூந்தனல் லாயஞ்சல் வந்தனர் மேதினிதான்
கரையும் படிமொழி முன்பனி நாட்கன மாமுறைகள்
இரையுங் கலைசைத் தியாகேச ருக்கன் பிலார்வினையே
புரையும் பகைமன்னர் போர்தணிப் பானன்று போந்தவரே. ()

---

444. அத்தலை - அவ்விடத்து. இரு கோக்கள் - இரண்டு அரசர்கள். மிகை - பகை. இ தலைசேரும் கல்=இகல் - பகை. நத்து - சங்குகள்.

445. சென்றவர் - தலைவர், உரு வேறதாய் - வெளுத்து. மங்குல் - மேகம், வடகாற்றுவீசும்காலமாதலின் மேகம் தெற்கோட என்றார். மறைக்க - போர்வையால் மூட. மரு - நறுமணம். பற்பங்கள் பற்பங்களாக - தாமரைப் பூக்கள் பொடியாக; பற்பம் - பத்மம், பஸ்மம்; பிரயோகவிவேகம், திங்குப் படலம், 2, உரையைப் பார்க்க.

446. விரை - வாசனையை. முன்பனி பொழியும் நாளில். இரையும் - முழங்கும். அன்று போந்தவர் வந்தனர்.

## கூஉ. துணைவயிற் பிரிவு.

### தலைவன் பாங்கிக்கு அறிவுறுத்தல்.

447. செருத்துணையாய்மன்னர்தெம்முனைச்சென்றியான்றிரும்பளவும்
கருத்துணை யான கலைசைத் தியாகர் கதமிலருள்
உருத்துணையாயன்பர்க்கின்புசெய்தாலென்னவொண்ணுதலாய்
திருத்துணை யான தெரிவைக் கறிவித்துத் தேற்றுகவே. (க)

### தோழி மறுத்தல்.

448. இரவல ரம்பிறைக் கும்மதன் ஞாட்புக் கிடைதருகொம்
பாவல நீங்கத் துணையா யிருக்கிற் பலனல்லவோ
அரவலங் காரர் கலைசைத் தியாகரை யாதரியாப்
புரவலர் போர்த்துணை யாப்புறம் போகப் புகன்றவரே. (உ)

### தலைவிக்குப் பாங்கி அறிவுறுத்தல்.

449. கட்டாரி யாதி படைதிரித் தேமன்னர் காளையமேற்
சுட்டா நடந்தனர் தோகையன் னாய்நமர் சூழ்ந்துசிறார்
வட்டாடும் வீதிக் கலைசைத் தியாகரை வாழ்த்தலர்போல்
ஒட்டா ரிடுநொச்சி யாதுகொ லாயங் குறுகின்றதே. (ந)

---

447. செருத்துணையா - போருக்குத் துணையாக. அருள்: எழுவாய். திருத் துணையான - திருமகளுக்கு ஒப்பான.

448. இரவு அலர் அம் பிறைக்கு - இரவில் வெளிப்பட்ட அழகிய பிறைக்கு. மகரவொற்று விரித்தல்விகாரம். ஞாட்புக்கு இடைதரு - போர்க்குப் பின்னிட்ட. கொம்பர் அவலம்; கொம்பரென்றது தலைவியை. ஆதரியாப் புரவலரென்றது ஆதரிப்பார் பகைமை கொள்ளாரென்பதைக்குறித்துநின்றது.

449. கட்டாரி - ஒருவகை ஆயுதம். திரித்து - சுழற்றி. காளையம் - போர். சுட்டா - குறித்து. நமர் - நம் தலைவர். வட்டாடுதல் - ஒருவகை விளையாட்டு; "கல்லாச் சிறுஅர் நெல்லிவட் டாடும்" (நற். 3: 4); "பொருது வட் டாடுஞ் சிறார்வீதி யைந்நதிப் புண்ணியர்" (திருவையாற்றந்தாதி.) நொச்சி-மதில். யாது கொலாய் அங்கு உறுகின்றதே - இப்பொழுது எந்த நிலையில் உள்ளதோ; அழிந்திருக்குமென்றபடி.

## தலைவி பின்பனிப் பருவம் கண்டு வருந்தல்.

450. தெள்ளும்வெண் ணீற்றர் சிதம்பர நாயகர் தென்கலைசைப்
புள்ளுஞ் சிறகிற் பெடையொடுக் கிப்பிள்ளை போற்றித்துயில்
கொள்ளும் பனிதூங் கிரவிலித் துன்பங் கொளக்கருவில்
தள்ளும் வினைசுமந் தேனைப்பெற் றாளன்னை தான்சுமந்தே. (௪)

## தலைவியைத் தோழி ஆற்றுவித்தல்.

451. கும்பங் கொடுத்த கலைசைத் தியாகர் குளக்கணுஞ்சீ
தம்பம் பிடவசை யுங்குளிர் வாடை தணந்தவர்க்குக்
கம்பஞ்செய் பின்பனி நாளின்வந் தார்நண்பர் கவ்வையற
அம்பர் தணைவிர லாய்துணை யாய்முன் னகன்றவரே. (௫)

## ௧௧. பொருள்வயிற் பிரிவு.

## தலைவன் பாங்கிக்கு அறிவுறுத்தல்.

452. ஆசையுண் டேல்வெம் படையுள தாகிடு மப்படையால்
ஆசையெல் லாம்பெற் றரசாட்சி யைப்பெற லாகுமன்றே
ஆசையி னால்லறங்கள்செய் தின்பமுற் றுற்றிடலாம்
ஆசை யறுக்குங் கலைசைத் தியாக ரருட்பணியே. (௧)

---

450. கருவில் தள்ளும் வினை - பிறப்பில் தள்ளும் தீவினையை.

451. கொடுத்த - பிரமனுக்கு அருளிய. குளக்கண்ணும் - நெற்றிக் கண்ணாகிய அக்கினியும். சீதம் பம்பிட; பம்பிட - பரவ. வாடை - வாடைக் காலத்தில். கம்பம் செய் - நடுக்கத்தை உண்டாக்கும். நண்பர் கவ்வை - நண்பர்களுடைய கவலை. அகன்றவர் வந்தார்.

452. ஆசை உண்டேல் - செல்வம் இருந்தால்; ஆசை - பொன். படை - சேனை. ஆசையெல்லாம் - திசை யெல்லாம். ஆசையினால் - விருப்பத்தோடு. ஆசை அறுக்கும் - குற்றத்தை நீக்கும்; ஆசு - குற்றம். அருட்பணியை ஆற்றிடலாம். இதன் முதலிரண்டடிகளும், "பொன்னி னாகும் பொருபடை யப்படை, தன்னி னாகுந் தரணி" (சீவக. 1923) என்பதைத் தழுவி வந்தன.

### பாங்கி மறுத்தல்.

453. சினக்கோல மால்விடை யூர்திச் சிதம்பர தேவர்நந்த
வனக்கோ விருந்த புராநாட் டதிப மணமகலாத்
தனக்கோ கனக முழுவது மீபவ டானிருக்க
எனக்கோ வரையும்விட் டப்பா லிருப்பதற் கிச்சிப்பதே. (உ)

### தலைவிக்குப் பாங்கி அறிவுறுத்தல்.

454. தேசிக வாழ்வு சிறுபிறை வாணுதற் செல்வியன்பர்
தேசிக மில்லெனி னில்லென்று பக்குவஞ் சேருயிர்க்குத்
தேசிக ராய்வந் தருளுங் கலைசைத் தியாகர்வளர்
தேசிக முங்கொண்ட தண்டக நாட்டகஞ் சென்றனரே. (ஙு)

### தலைவி இளவேனிற்பருவம் கண்டு வருந்தல்.

455. மைக்குற்ற நீக்குங் கலைசைத் தியாகர் மணிநடங்கண்
டைக்குற்ற முந்தவிர்ந் துய்பவர் போலுய்வ தெப்படிநாம்
சொக்குற்ற பூண்முலை மாதே துணர்கொண்டு சூழநின்ற
கொக்குச்சிக் கேறி யிருணிறப் பூங்குயில் கூவினவே. (ச)

---

453. கோலம் - அழகு. தனக் கோகனகம் - கொங்கையாகிய தாமரை யரும்பு; பத்மநிதி என்பது வேறுபொருள். அக் கோ வரையும் விட்டு; கோ வரை - தலைமையையுடைய மேருமலை. இச்சிப்பது என்.

454. தேசிக வாழ்வு - ஒளியோடு கூடிய வாழ்வு; தேசு என்பது தேசிக மெனத் திரிந்ததென்பர்; சீவக. 1480, ந. செல்வி: விளி. தேசிகம் - பொன். தேசிகம் இல் எனில் வாழ்வு இல். என்று - என்று கூறி. தேசிகர் - குரு. வளர்தேசை இகத்திலும் கொண்ட. அன்பர் இல்லென்று கூறிச் சென் றனர்.

455. சொக்கு - அழகு. துணர் - பூங்கொத்து. கொக்கு உச்சிக்கு - மாமரத்தின் உச்சியில்; "கொக்கின் றலையிற் குயிலின மேறுபு கூவினவே" (திருவாவடுதுறைக்கோவை, 454); "கொக்கின்மேற் குயில்கள் கூவுங் குளிர் பொழிற் குறியுஞ் சொன்னாள்" வி. பா. கீசகன், 59.

### தலைவியைத் தோழி ஆற்றுவித்தல்.

456. தாரோதி மங்கை கலைசைத் தியாகர் தமிழ்வரைக்காற்
றேரோன் வசந்தத் திருநா ளிதுசிறந் தோர்வம்மினென்
றேரோங் கவன்சின்ன மார்ப்பது கேட்டிங்ங னிம்மெனுமுன்
பேரோகை மிக்குவந் தார்பொருட் கேகிய பெற்றியரே. (ரு)

### தலைமகன் வந்து தலைமகளைக் கலந்துழி முகிலோடு மகிழ்ந்து கூறல்.

457. மருவணி மாலையைம் பாலிசெம் பாலிகை மட்டருந்திப்
பருவரல் வீட முயங்கினம் யாம்பா மன்கலைசை
ஒருவன் சிதம்பர வீசனெல் லாவுயிர்க் குஞ்சுரக்கும்
திருவருள் போற்சொரி திங்கண்மும் மாரி செழுங்கொண்டலே.

கலைசைக் கோவை முற்றிற்று.

---

456. கால் தேரோன் - மன்மதன்; கால் - காற்று. அவன் சின்னம் - குயில். திருவாவடுதுறைக் கோவை, 455-ஆம் செய்யுளைப் பார்க்க.

457. ஐம்பாலி - கூந்தலையுடையவளது; ஐம்பால்-கூந்தல்; "வண்டேதைம் பாலி" (286) என்றார் முன்னும். பாலிகை - கீழுதடு. மட்டு - தேன். பருவரல் வீட - துன்பம் கெட. கொண்டலே சொரி.

1275 சங்கொடுசக் கரந்துளபம் புயநான்கென்
பனகாந்து தயங்கு சோதி
யங்கமுடன் முத்திரைக்கை யபிராம
மகிழ்மாற னுகி யாரு
மிங்கிவன்மன் னுயிர்க்கடவு ளெனத்தோன்றி
யாண்டுனக்கி ரைம்ப தாநாட்
பொங்கியபே ரந்தாமம் புரப்பனென
வந்தாமம் புக்கான் மைந்தா. (சஉ)

வேறு.

1276 இறந்தா னலன்மன் னுயிர்நிலைபெற்
றிருந்தா னலன்றன் புறநிலையுந்
துறந்தா னலன்பே ரின்பநிலை
தொடரா னலன்மெய் யுணர்வுணர்வுட்
பிறந்தா னலன்பொய் யுணர்வுணர்வுட்
பெற்று னலன்சொற் றவைமுழுது
மறந்தா னலனவ் வுழிநினைவின்
மறவா னலனுன் மறையோனே. (சங)

1277 பார்த்தான் விசும்பைத் திசைகளிற்கண்
பதித்தான் மதித்தா னுருவெளியாய்க்
கூர்த்தா னுணர்வா லனுபவித்தான்
குவித்தான் காமு துரைசெவித்தான்
வேர்த்தா னுயிர்த்தா னயிர்த்தான்கண்
விழிப்பச் சுழிப்ப தெனுந்திவலை
வார்த்தான் மணிமார் பினிற்றளர்ந்தான்
மருண்டான் மருளா மறையோனே. (சச)

1278 அக்கா லையினிற் பிருகுவுமன் றயல்வை கியமார்க் கண்டயனு
மெக்கா லையுமெய்ந் நிலைதளரா விறைவா வெமக்கு மயர்வறவே
முக்கா லமுமுற் றுணர்வருணீ முற்று மயர்வ தெவனெனவத்
தக்கார் தெருட்ட வுபநிடதந் தரித்தான் றெளிவெய் தினன்மன்னே.

பதினோராவது : தானங்காட்டுசருக்கம் முற்றும்.

## கஉ. [1]திருவாராதனச் சருக்கம்.

1279 இம்மா நிலத்தைப் படைப்பதற்கிங்
கென்னைப் படைத்தா னிறையெனத்தோர்
மெய்ம்மா தவமே புரந்ததற்கு
மேம்பட் டெனையா னிறையெனவே
பொய்ம்மார்க் கமதாய்ப் பனுவலினைப்
புணரா தடக்கும் பெருதவிக்
கைம்மா றினுக்கும் பெருதவிக்
கைம்மா றம்மா காண்கிலனால். (க)

1280 முட்டாட் கொழும்பா சடைக்கமலை
முகுள முலைக்கோ டுமுதெழத்தெண்
மட்டா றலைத்து வழிந்தொழுகும்
வனமா லிகைமார் பனைமறைக்கு
மெட்டாச் [2]சொருபன் றனையினியா
னினிமைப் புலவீர் வழிபடுநற்
பட்டாங் கமையாங் கெழுமினெனப்
பகர்ந்தா னகிலம் படைத்தானே. (உ)

### வேறு.

1281 உத்தமப் பிருகு நாரதன் வசிட்ட
னுண்மைதோய் காசிபன் புலகன்
அத்திரி கிரது மாசிலாத் தக்கன்
அங்கிரா மரீசியா தியராய்ச்
சித்தசித் தீசன் றிறமுணர் பவாஞ்
சிற்குணத் தெசப்பிர மரெனும்
பத்திய ரெகினம் பத்துடைப் படிவம்
படைத்தெழுந் தவற்றின்மீ தேற. (ங)

---

[பி-ம்.] [1]திருவாராதனைச். க. [2]சொரூபன். சா.

1282 ஆற்றல்சார் மனுக்க ளெனுமவர் சுவாயம்
புவனவ னாதியா மெனவே
தோற்றுமீ ரெழுவர் துறப்பன துவரத்
துறந்துள முனிவரா மெனவே
போற்றுமோ ரெழுவ ராழியந் தடந்தேர்
புட்பக விமானமென் [1]றமைத்த
வேற்றமா மவற்று ளேற்றன திசைக
ளெவ்[2]வுழி யினும்விரைந் தேற. (ச)

1283 ஆடல்கூர் துருவ னலன்றா னனில
னுபனன் சோமன்மாண் பிரத்தி
யூடன்வா னவருந் துதித்திடுந் தலைமை
யுளபிர பாதனென் றுயர்ந்த
பாடல்சால் வசுக்க ளெண்மரும் விசும்பிற்
படர்பசும் பொனங்கொடி நுடங்கு
நாடகக் கடினப் பாய்பரித் தேர்க
ளாவிரு திசைகுலா யேற. (ரு)

1284 குழவிவெண் டிங்கள் வாநதி யிதழி
குடிலவான் சடிலமீ தணிந்தோன்
மழவிடை யெருத்திற் பதினொரு கோடி
வடிவெடுத் தொருங்குசூழ்ந் தேற
முழவுறழ் திணிதோ ளெழுவுறழ் தடக்கை
முருகுர்தன் வான் கடல்கடைந் தளித்த
வழகமர் தகத்தச் சுனிகளும் பாங்க
ரமைந்துபுட் பகத்தின்மீ தேற. (சு)

1285 சிந்துரா னனத்தோ னாகுமீ தேறச்
செய்யவன் மயூரமீ தேறச்
சந்திரன் விமானந் தனில்விரைந் தேறத்
தழலவன் றகரின்மீ தேற

[பி-ம்.] [1]றிழைத்த; [2]வழி. சா.

அந்தாத் துழலா தவர்கடேற
வடலயி ராவதப் பிடர்மே
லிந்திர னேற நடுவண வெகினத்
தேறலு மெதிரெதிர் பணிந்தே. (எ)

1286 பற்றுதற் குரிய மலர்மக ளகலாப்
பரனையே பற்றிமற் றியாவும்
தெற்றெனத் துறந்த வேனமா முனிவர்
திசைதொறு மாசிகண் முறையே
கற்றன ராகக் கின்னரர் தேவர்
கானம்யா ழிடந்தழீஇ யெடுப்ப
வெற்றிவால் வளைபே ரிகையொடுங் குளிற
விண்ணுலாப் போந்தனன் விரிஞ்சன். (அ)

இவை ஆறும் தொடர்.

வேறு.

1287 இருளாய மனத்தினனை மனுகுலத்துட்
கடையாய வென்னை யீங்கோர்
பொருளாக வடைந்தருள்கூர் பெருமிதச்சே
யரிநெடுங்கட் புயல்போ னீண்ட
சுருளாமென் குழற்றிருவின் களபமுலைச்
சுவடுழுத தணர்தோய் மார்பத்
தருளாள னிலைபிரியாப் பழம்பதிவந்
தடைந்தனன்பா ரமைத்து ளானே. (கூ)

1288 பொன்னின்மால் வரைகயிலைப் பிடரிருந்து
நிலத்தடைந்த பொற்பே போல
அன்னவா கனத்திலிருந் தவன் புவனத்
தடைந்துநக ரழகைக் கண்டே
யென்னவாழ் வுடைத்தவமுன் செய்தனனென்
றேயிருடி கணங்கட் கெல்லா
முன்னதா கியவசிட்டன் முதலோரை
முகநோக்கி மொழியு மன்றே. (கய)

1289 என்னுலகத் தெனக்களித்த தனிநகருஞ்
சிவனகரு மெனது தாதை
தன்னுலக மெனப்பகுத்த வுயர்நகருங்
குலிசபதி தனக்குண் டாய
பொன்னுலகத் தவனிருக்கைப் பொலநகரு
மெந்நகரும் பொழிலே ழிற்கு
முன்னுலகிற் பாதகண்டத் திந்நகர்க்குப்
பொருவருமோ மொழியு மென்றே. (கக)

இரண்டும் தொடர்.

1290 உன்னதா கியபடைப்பின் விசித்திரஞ்சால்
பன்னகரு ளுயிர்க ளெல்லா
நின்னதா ணையினிறந்தாற் பிறந்தவண்பே
ரின்பநிலத் தெய்து மென்றே
சொன்னதா லிறைதனதாம் விசித்திரத்துள்
விசித்திரமாந் தோற்றஞ் சான்ற
முன்னதா லழிவிலதா மிந்நகர்க்கெந்
நகர்நிகரா முதல்வா வென்றார். (கஉ)

வேறு.

1291 *[1]அந்தணர் மொழிந்த வுரையினை யுட்கொண்
டகனமர்ந் தணிதிக ழுரையிற்
[2]சுந்தரச் சுவணாம் பரத்தினை நெகிழ்த்துச்
சுற்றுவிட் டதன்பினோர் வெண்பட்
டிந்துவி னெறிப்ப வரையுடீஇக் கடங்க
ளியற்றிவான் [3]பொருநையிற் படியா
வுந்தியி னுதித்தோ னெனும்பெயர் பிரமற்
குண்மையா [4]மெனுந்திறத் தெழுந்தான். (கங)

[பி-ம்.] [1]அந்தண ரறைந்த வுரையினைச் செவிக்கொண்; [2]சுந்தரப் பீதாம் பரத்தினை; [3]பொருநையுட்; [4]மெனும்படிக் கெழுந்தான். மா.

1292 எழுந்தவ னீர வாடையை நீக்கி
யேமவான் பட்டினை யுடுத்துக்
கொழுந் துவிட் டெழுந்த சிகையினை [1]யுலர்த்திக்
கொழும்பொ னூல் வலம்படத் திருத்தி
யழுந்திய வுரையாற் பவித்திர காய
மடைந்துகே சவநம முதலாஞ்
செழும்பொரு ளுரைகண் முறைபாயப் பொறித்தான்
திருமண்மத் தகமுத லெவணும். (கச)

1293 பரிமளச் செழுந்தண் ணறவரூப் பசும்பொற்
பதுமவொண் பொகுட்டுளா னதன்பின்
விரிமலர்க் காத்தின் வசந்தமென் பனிநீர்
விடுந்தொறுங் குழைந்தகா லையினிற்
றெரிசன மணப்பப் பன்னிரு தலத்துந்
தீட்டிய திருமணி னடுவண்
அரிசனத் துகளைக் கமலையே நமவென்
றுதரித் தழகுறப் பொறித்தான். (கரு)

1294 பொறித்தவ னதன்பின் பொறித்திடா மறைகள்
புகன்றமாண் பொருளுரை முழுதுங்
குறித்தனன் மனத்துட் குறித்தபின் பவற்றைக்
குறிப்பரும் பெயர்களா யிரமுஞ்
செறித்தநான் முகத்துட் சிறந்தசெங் கனிவா
யினுட்டெகிழ்ந் திலங்குநா வதன்கண்
ணெறிப்பட நிரைத்து நிகழ்த்துபு தியான
நிறைவொடு நிமலர்சூழ்ந் தெழவே. (கசு)

1295 இடித்தெழுந் திருப்பாற் கடலிறு வரையி
ளிளங்கதிர் பரப்பியே யிரவி
பொடித்தெழு போழ்தில் வெடித்தபோ தெடுத்துப்
புறவித ழதனையே போக்கி

---

[1]யுலற்றி. ச.

வடித்துநன் பொருளைப் புனலினை விரசை
வான்புன லெனமதித் திறைவன்
அடித்துணை வழிபட் டொழுகவே தனக்கென்
றமைந்தநற் றானமாங் கடைந்தான். (கஎ)

1296 தளித்தனன் புனிதப் புனலையாங் கதற்பின்
சதுமறைச் சாதநுண் ணறிவால்
அளித்தூல குணர்ந்த பத்திரா தனமே
யாதியாய் விளங்குமா தனத்துள்
நெளித்தெழு தரங்கப் பாற்கடல் கடைநா
ணிலம்பொறா தாழ்ந்தமந் தரத்தைக்
களித்துறு பிடர்க்கொண் டமாரை யுயக்கொள்
கமடவா சனத்தினி திருந்தான். (கஅ)

1297 புதைத்தனன் பவள வாயொடுந் தவளப்
பொற்புடைப் புனிதவொண் பட்டாற்
சுதைச்சுவைக் கலைக ளிரட்டியெண் ணென்குந்
தொகைவகை விரியினாற் றெருளக்
கதைப்படா வனப்பிற் கழறுநான் மறையின்
காட்சிதோய் செவிகளுந் தரியஞ்
சிதைப்பரும் வலத்தோ ளுறப்பவித் திரமுஞ்
சிறுவிரற் கயலுறச் செறித்தான். (கக)

வேறு.

1298 மிளிர்பொற் கலசமொ ரிருபஃ தைம்பான் மேலெட்டா
யொளிர்பொற் கும்பமு மொன்றவை நடுவண வுடன்வைத்தே
குளிர்பொற் புடைவிர சையினுறு புனல்கொள் கலமாமாந்
தளிர்பொற் புறமறை மொழிபகர் நினைவொடு தாபித்தான். ()

1299 கழுவா தருளுறு தயமல இலகிகர் கதிர்க்கு
முழுமா மணியயங் கிண்ணம தறமுது புனன்மொண்டப்
பொழுதார் புறவே திகைமே லடைவிற் பூரித்தான்
பழுதா னதுரு மலர்வட் டகைபல பாரித்தான். (உக)

1300 புழையா யிரமே தருதாரையுடைப் பொற்றூலந்
தழையா டகவொண் மலர்நீ ணிதியந் தன்னோடு
மழைமே னிலவெண் மதிபோன் மிளிர்வாழ் வுளவாய்வின்
விழைவால் வளைநீ ணிதிவே திகைமீ மிசைவைத்தான். (உஉ)

**வேறு.**

1301 ஒருநாயக முதலாயுல குயிர்கட்குயி ரெனலாய்
வருநா ரண வெதிரேயினி வருகென் றுறு மளவி
லிருநானில மகளூருவி னெய்தேனம தாகுந்
திருமாலென விதயத்தெதிர் செல்லத் தெரிசித்தான். (உஙு)

1302 இதயந்தனை யொருகோயிலி தென் றுற்றபி னெதிரே
சிதைவின்றெமை யுணர்வா னுறு திகிரிப்படை சிலைவாள்
கதைசங்கணி கருணைப்புயல் கைக்கொள்வது கடனென்
றுதயம்புரி திருமஞ்சன வுயர்வேதிகை யுய்த்தான். (உச)

1303 உந்திக்கம லப்போதி லுதித்தோனு மதன்பின்
றந்தைக்கெதி ரெனவோர்சத தளவாதன முதவா
முந்தப்பத மிசைகைம்மிசை மொண்டொண்புன லுய்த்தே
யந்தக்கர மிசையுய்த்தன னுமாசவ நீயம். (உரு)

**வேறு.**

1304 சாதிக் காயில வங்கமோ டேலந் தக்கோல
நீதிப் பரிமள வரிபிள வாமென நிறைபாகிற்
சோதிக் கப்புர முடன்வெள் ளிலையுறு சுவைகூர்வா
னாதிப் பானிரு கவுளூட் கொளவமிர் தாயுய்த்தான். (உசு)

1305 கைத்தா மரையி லுருத்திர னெண்ணங் கைப்பற்றிச்
சுத்தா சலமென் பதனை முகந்து துதித்துணர்வான்
மெய்த்தா ரணநவில் செங்கனி வாயை விளக்குகவென்
னத்தா வெனநல் கினனடி தொழுதங் கணர்கோமான். (உஎ)

1306 தீவட் டத்தை யகத்திடு சுறவெறி திரைநீர் சூழ்
கூவட்டத்தை யமைத்துள வெண்கட் குரவோன்மென்
பூவட் டகையினுள் வைகிய போதைப் பொருளூரைநா
னுவட் டமதிட மணிமுடி மேனசை யுறவைத்தான். (உஅ)

# மதுரைத்தமிழ்ச்சங்கத்தில் விற்கப்பெறும் புத்தகங்கள்.

## சங்கப்பிரசுரம்.

| | | ரூ. | அ. | பை. |
|---|---|---|---|---|
| 1. | ஞானாமிர்த மூலமும் உரையும் | 1 | 0 | 0 |
| 2. | சைவமஞ்சரி | 1 | 8 | 0 |
| 3. | யாப்பணியிலக்கணங்கள் | 0 | 10 | 0 |
| 4. | வைத்தியசாரசங்கிரகம் | 5 | 0 | 0 |
| 5. | பன்னூற்றிரட்டு | 3 | 0 | 0 |
| 6. | மகாபாரதம் அரும்பதவுரையுடன் | 4 | 0 | 0 |
| *8. | தமிழ்ச்சொல்லகராதி உயிர்வருக்கம் முடிய. முதற்பாகம். | 6 | 0 | 0 |
| | ஷை இரண்டாம்பாகம் | 4 | 8 | 0 |
| | ஷை மூன்றாம்பாகம் | 5 | 0 | 0 |
| 10. | தொல்காப்பியம் செய்யுளியல் (நச். உரை முதலிய) | 1 | 12 | 0 |
| 11. | திருவருணைக்கலம்பகம் | 0 | 6 | 0 |
| 12. | அமுதாம்பிகைபிள்ளைத்தமிழ் | 0 | 8 | 0 |
| 13. | கலைசைச்சிலேடைவெண்பா | 0 | 6 | 0 |
| 14. | தொல்காப்பியப் பொருளதிகார ஆராய்ச்சி | 1 | 4 | 0 |
| 15. | திருவாரூர் நான்மணிமாலை | 0 | 4 | 0 |
| | பன்னூற்றிரட்டு (செலக்ஷன்) | 0 | 4 | 0 |
| | திருவாலவாய்த் திருநீற்றுப்பதிகம் முதலியன | 0 | 1 | 0 |

## செந்தமிழ்ப்பிரசுரம்.

| | | ரூ. | அ. | பை. |
|---|---|---|---|---|
| *1. | ஐந்திணையைம்பது உரையுடன் | 0 | 3 | 0 |
| 2. | கனாநூல் (5) இனியதுநாற்பது (உரையுடன்) | 0 | 3 | 0 |
| 4. | புலவராற்றுப்படை | 0 | 3 | 0 |
| 6. | நேமிநாதம் (உரையுடன்) | 0 | 12 | 0 |
| *7. | திருநூற்றந்தாதி (உரையுடன்) | | | |
| 8. | திணைமாலை நூற்றைம்பது (உரையுடன்) | 0 | 8 | 0 |
| *9. | அநுமானவிளக்கம் | | | |
| 10. | அட்டாங்கயோகக்குறள் | 0 | 2 | 0 |
| 12.* | பன்னிருபாட்டியல் | | | |
| 13. | நான்மணிக்கடிகை (பழைய உரை) | 0 | 4 | 0 |
| 14. | முத்தொள்ளாயிரச்செய்யுட்கள் | 0 | 2 | 0 |
| 15. | திருச்செந்திற்கலம்பகம் | 0 | 3 | 0 |
| 16. | திருவாரூருலா | 0 | 8 | 0 |
| 17. | சுகசந்தர்சன தீபிகை | 0 | 12 | 0 |
| 18. | இயற்கைப்பொருட்பாடம் | 0 | 4 | 0 |
| 19. | தேவையுலா | 0 | 3 | 0 |
| 20. | நரிவிருத்தம் | 0 | 2 | 0 |
| 21. | சிதம்பரப்பாட்டியல் (உரையுடன்) | 0 | 8 | 0 |
| 22.* | திருக்கலம்பகம் (ஷை) | | | |
| 24. | குருமொழிவினாவிடை | 0 | 1 | 0 |
| 25. | கேசவப்பெருமான் இரட்டைமணிமாலை | 0 | 2 | 0 |
| 26. | திருத்தணிகைத்திருவிருத்தம் | 0 | 1 | 0 |
| 27. | மதுரைத்திருப்பணிமாலை | 0 | 8 | 0 |
| 28.* | சந்திராலோகம் | | | |
| 30. | ஞானாமிர்தக்கட்டளை | 0 | 3 | 0 |
| 31. | பாண்டியம் | 0 | 4 | 0 |

| | | | | |
|---|---|---|---|---|
| 32. | மநீஷாபஞ்சகம் ... ... ... | 0 | 8 | 0 |
| 33. | வேளிர்வரலாறு ... ... ... | 0 | 8 | 0 |
| 34. | அகப்பொருள்விளக்கம் ... ... ... | 1 | 4 | 0 |
| 36. | உவமானசங்கிரகம் ... ... ... | 0 | 1 | 0 |
| 37. | மாறனலங்காரம் மூலமும் உரையும் ... ... | 4 | 8 | 0 |
| 38. | திருப்புல்லாணிமாலை ... ... ... | 0 | 2 | 0 |
| 39. | பழமொழி மூலமும் பழையஉரையும்(முதல் 100 செய்) | 1 | 0 | 0 |
| 40. | திருமாலிருஞ்சோலைமலை அழகர்பிள்ளைத்தமிழ் ... | 0 | 8 | 0 |
| 41. | பொருட்டொகைநிகண்டு ... ... ... | 0 | 6 | 0 |
| 42. | அகராதிநிகண்டு ... ... ... | 0 | 12 | 0 |
| 43. | மேகவிடுதூது ... ... ... | 0 | 2 | 0 |
| 44. | திருக்குற்றாலமாலை ... ... ... | 0 | 2 | 0 |
| 45. | தண்டலையார்சதகம் ... ... ... | 0 | 4 | 0 |
| 46. | இராமோதந்தம் ... ... ... | 0 | 3 | 0 |
| 47. | பழமொழிமூலமும் பழைய உரையும் (2-வது 100 செய்) | 1 | 0 | 0 |
| 48. | சேதுநாடும் தமிழும் ... ... ... | 0 | 6 | 0 |
| 49. | கடைவள்ளலார்காலம் ... ... ... | 0 | 6 | 0 |
| 50. | தமிழரும் ஆந்திரரும் ... ... ... | 0 | 4 | 0 |
| 51. | மதங்கசூளாமணி ... .. ... | 1 | 0 | 0 |
| 52. | கூடற்புராணம் ... ... ... | 0 | 10 | 0 |
| 53. | திருவள்ளுவர் ... ... ... | 0 | 6 | 0 |
| | ஷை ஆங்கிலத்தில் ... ... ... | 0 | 6 | 0 |
| 54. | அரும்பொருள்விளக்க நிகண்டு ... | 1 | 4 | 0 |
| 55. | மாறனகப்பொருளும் திருப்பதிக்கோவையும் ... | 0 | 12 | 0 |
| 56. | பாப்பாவினம் ... ... ... | 0 | 10 | 0 |
| 57. | மதுரைமும்மணிக்கோவை ... ... ... | 0 | 5 | 0 |
| 58. | பழனிப் பிள்ளைத்தமிழ் ... ... ... | 0 | 3 | 0 |
| 59. | கடம்பர்கோயில் உலா ... ... ... | 0 | 6 | 0 |
| 60. | சங்கரநயினார்கோயில்அந்தாதி ... ... | 0 | 6 | 0 |

மேலேகண்ட சங்கப்பதிப்பில்லாத புத்தகங்கள் வேண்டுவோர் வேறு புத்தகசாலைகளுக்குத் தாங்களே நேரில் எழுதிப் பெற்றுக்கொள்ளவேண்டும்.

* இவ்வடையாளமிடப்பட்டவை இப்போது கைவசமில்லை.

குறிப்பு:-1. சங்கத்தினின்று மாதமொருமுறை அரிய பெரிய விஷயங்களைக்கொண்டுவெளியாகிவரும் இச் "செந்தமிழ்"ப்பத்திரிகைக்கு வருஷச் சந்தா ரூ 4. தனிப்பிரதியின் கிரயம் அணா 8. வெளிநாடுகளுக்கு வருஷச் சந்தா ரூ 4—8—0. இதுவரை 31 தொகுதிகள் பூர்த்தியாயிருக்கின்றன. இவற்றுள் 1, 2, 3, 7, 8, 9, 10, 16-ம் தொகுதிகள் கைவசமில்லை. பைண்டு செய்யப்பெறாததொகுதிகள் தொகுதி 1-க்கு ரூ 4—0—0-வீதமும், பைண்டு செய்யப்பெற்ற தொகுதிகள் தொகுதி 1-க்கு ரூ 4—12—0 வீதமும் விற்கப் பெறும். வி. பி. சார்ஜ் பிரத்தியேகம்.

2. சங்கப்பிரசுரம், செந்தமிழ்ப்பிரசுரம், செந்தமிழ் முழுத்தொகுதி— இவற்றுள் ஒவ்வொருபுத்தகத்திலும் ஒரேதடவையில் 10 பிரதிகளும் அதற்கு மேற்பட்டும் வாங்குவோர்கட்கு மொத்தக்கிரயத்தொகையில் 100க்கு 10 வீதம் கமிஷன் தள்ளிக்கொடுக்கப்படும்.

T. S. P. P. MADURA-34

லக்ஷ்மீநாராயணையர், மானேஜர்.